
பன்னிரு திருமுறைத் திரட்டு




தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
...தே நாடு.

(... அழித்தல். மறைத்தல். அருளல்.)

ஏழாம் பதிப்பு] சார்வரி ஆவணி—1960 [விலை 40 புதுகாசு

திருச்சிற்றம்பலம்



திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்தி மாணிக்கவாசகர்



காஞ்சிபுரம்-முருகேச செட்டியார்



காஞ்சிபுரம் சமரபுரி செட்டியார்

ஓம்
திருச்சிற்றம்பலம்.

அணிந்துரை.

பொன்னம் பலம்அருவம் பொற்றூண் அருவுருவம்
பின்உருவம் கூத்தப் பிரான்.

நடுநிலை திறம்பா ஆய்வாளர் பலரும் உலகத்தில் மிகவுந் தொன்மைவாய்ந்தது தென்தமிழ் நாடென்றும், அதுபோல் தொன்மையான மொழியுந் தமிழ்மொழியே என்றும், தொன்மையான நெறியும் சிவனெறியே யென்றும் ஒருமனப்பட்டு எழுதியும் கூறியும் வருகின்றனர். இவ்வுண்மை பாண்டி நாடென்னும் சொல்லானே பெறப்படும். அது, பண்டுள்ள நாடு பாண்டி நாடென்பதாம். மாணிக்கவாசகப் பெருமானும் ''பாண்டிநாடே பழம்பதியாகவும்'' ''அப்பாண்டி நாட்டைச் சிவலோகமாக்குவித்த'' எனவுங்கிளந்தெடுத்து ஓதியருளினர்.

மேலும் ''தென்னா டுடைய சிவனே போற்றி'' எனவும், "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' எனவும் ஓதியருளிய முறையாற் சிறப்பும் பொதுவுமாம் செம்பொருட் கொள்கை பெறப்படும். சிவபெருமான் ஆருயிர்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு எட்டுத் திருவுருவங்களில் விளங்கித் தோன்றுகின்றனன். அவை 'நிலம், நீர், நெருப்பு, உயிர், நீள்விசும்பு, நிலாப், பகலோன், புலனாயமைந்தன் என்ப. உயிர்-காற்று. புலனாய மைந்தன்-அறிவுடைய ஆருயிர். ஐம்பூதங்களுள் நடுவாகவுள்ளது நெருப்பு. அதன் அடையாளமே சிவலிங்கம். சிவலிங்கம் அருவுருவத்திருமேனி. இஃதொன்றே சைவத்தின் மேன்மையினையும், தொன்மையினையும் வலியுறுத்தும். ஐம்பூதங்களின் வைத்து இறைவனைவழிபடுவது அவன்றன் ஐந்தொழில் நினைவின் அருள் வழிபாடாகும். அவற்றிற்குரிய திருமேனிகள் பிள்ளையார், முருகப்பெருமான், ஆலமர்செல்வன், அருளம்மை, சதாசிவக்கடவுள். இத்தகைய ஐவகைத் திருவுருவங்களே சிவன் கோவில்களிற் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. தனித் தனியாக ஐந்தொழிற்குக் காரணப்படுமிவற்றை ஒரு திருவுருவில்வைத்து வழிபடுவதற்கு அமைந்ததே பொன்னம்பலவாணர் திருவுருவமாகும்.

இத்திருவுருவங்களை மெய்யன்பர்கள் ஒல்லும்வகை ஓவாது அகத்தும் புறத்தும் ஓதிவழிபட்டுய்யுமாறு இறைவன் உள்நின்றுணர்த்த 'எனதுரை தனதுரையாக' என்னும் இயல்புடனே நால்வர் முதலாயினரால் பாடியருளப்பட்ட திருமுறைகள் பன்னிரண்டு. இவைகள் திருமாமறைகள் என்றும், திருமாமுறைகள் என்றும் வழங்கப்படும். மூவரோதிய தேவாரத் திருமுறைகள் திருமாமறைகள் எனப்படும்; மாணிக்கவாசகர் பாடியருளிய திருவாசகம் திருமாமறை முடிபாகும்; திருக்

கோவையார் திருவடிப் பேருகும். திருமூலர் திருமந்திரம் திருமாமுறையாகும். திருமாமுறை—செந்தமிழாகமம். ஏனையவற்றுள் 1. திருமுகப்பாசுரம், 2. காரைக்காலம்மையார் அருளியன, 3. சேந்தனர் திருப்பல்லாண்டாகிய மூன்றும் இவைபோக எஞ்சிய ஒன்பதாந்திருமுறை, பதினோராந்திருமுறை, பன்னிரண்டாந்திருமுறை ஆகிய மூன்றுங்கூடி ஆறும் தனித்தமிழ்மறை உறுப்புகளாகும். இப்பன்னிரு திருமுறைத் திருப்பாட்டுக்கள் ஏறத்தாழ பதினெண்ணாயிரத்துக்கு மேலாகும். அவையனைத்தையும் இஞ்ஞான்று ஒருவர் ஓதுவது அருமையிலும் அருமையாகும்.

மெய்யன்பர்கள் எளிதின் ஓதியுய்யும்வகையாய்ப் பன்னிரு திருமுறைப்பிழிவாய் அரும்பெருந்திருப்பாட்டுக்களைத் தொகுத்துத் திருஞானசம்பந்தன் கம்பெனி இணை கவுணியனச்சக உரிமையாளர் சிவத்திரு. முருகேசச் செட்டியார், அன்னவர் இளவல் சமரபுரிச் செட்டியார் காலமுதலாகப் பன்னிரு திருமுறைத் திரட்டு என்னும் திருப்பெயரான் அழகிய முறையாக அச்சிட்டு அடக்கவிலைக்கு வழங்கி வருகின்றனர். அவர் கட்குப்பின் 'இவன் தந்தை எந்நோற்றான் கொல்எனுஞ்சொல்' என்பதற்கிலக்காக அதேமுறையில் அவர்தம் அருமை மக்களான் அச்சிட்டு வழங்கப்பெறுகின்றது. அம்முறையில் ஆறு பதிப்புக்கள் வெளியாகி இப்பொழுது ஏழாம் பதிப்புக்கூட்டு வெளியீடாக இது வருகின்றது. இச்சிவத்தொண்டு எல்லாச் சிவபுண்ணியத்திலும் மேலானதாகும். இவ்வுண்மை 'அளப்பில கீதஞ் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே' என்பதனால் நன்கு பெறப்படும். அத்தகைய கீதமாகிய திருமுறையினை ஓதுவார்க்குப் பெருந்துணையாக நூல் அச்சிட்டு வழங்குவார்க்கு அடிகள் அருளுமாறு அதனினு மிக்கதென்பது சொல்லாமலே அமையும். இப்பெருஞ் சிவபுண்ணியம் நாளும் வளர்வதாக. இதன்கண் ஈடுபட்டார் அனைவர்க்கும் அம்மையப்பர் திருவருளால் வாழ்நாள், செல்வம், உடல் நலம், உள உரம், சிவப்பணி, மக்கட்பேறு முதலிய அனைத்தும் நாளும் நாளும் பெருகுவனவாக.

இதனைக் கற்பார்க்கு மேலும் புறத்துணையாய் நின்று நிலவக் கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன எந்தை அருணகிரியாரருளிய திருப்புகழ், திருவகுப்பு முதலியனவும் சேர்க்கப் பெற்றுள்ளன. இந்நூலைச் செந்தமிழன்பர்களும் செந்நெறிச் செல்வர்களும் வாங்கியும், வாங்குவித்தும், ஓதியும், ஓதுவித்தும், நோய், வறுமை, பகை முதலிய எவ்வகைத் துன்பங்களும் அணுகாது நலம், செல்வம், உறவு முதலிய எல்லா இன்பங்களும் இறையருளால் பெற்று இனிது வாழ்வார்களாக.

இங்ஙனம் அன்புள்ள,

திருவள்ளுவரகம், ப. இராமநாத பிள்ளை.

ஓம்

பதிப்புரை

'பன்னிரு திருமுறைத்திரட்டு' என்னும் இவ்வரும் பெரும் நூலின் சிறப்பும், திருமுறைப் பெருமையும், வகைமையும், தமிழ்நாடு, தமிழ்மொழி, சிவநெறி முதலியவற்றின் தொன்மையும், நன்மையும் பிறவும் அணிந்துரைக்கண் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

இவ்வேழாம் பதிப்பு நல்லதோர் நினைவுக்குறி வெளியீடாக வெளிவருகின்றது. அஃதாவது 'திருஞானசம்பந்தன் கம்பெனி இணை கவுணியன் அச்சகம்' என்னும் சீரிய நிலையம் இறையருளால் தோன்றி அறுபதாண்டுகளாக நன்கு நடைபெற்று வருகின்றது. அத்துடன் இவ்வச்சக உரிமையாளருக்கு உணர்ச்சியொத்த நண்பராய்ச் சிவத் தொண்டராய்த் திருமுறை வெளியீட்டில் பேரார்வம் உடையராய்த் தம்மாலும் இயன்ற அளவு அப்பர் திருமுறையினை வெளியிட்டும், ஏனைத் திருமுறைகளை வெளியிடும் சிவபுண்ணியப் பெருந்தொண்டர்கட்கு, உடல் பொருள் ஆவி மூன்றனும் உறுதுணை புரிந்தும் வருவதனையே தம் தலைக்கடனாகக் கொண்டொழுகும் திருத்துறையூர் சிவத்திரு. கு. ஆறுமுக நயினார் அவர்கட்கும் அறுபதாண்டு நிறைவுற்றுள்ளன. இவ்விரு பெரும் நினைவுக்குறியாக இது வெளிவருகின்றதென்பதாம்.

இந்நூலினை மெய்யன்பர்கள் வாங்கி ஓதிப் பெரும்பயன் அடைவதுடன் இதுபோன்ற திருமுறை வெளியீட்டுச் சிவபுண்ணியப் பெரும்பணியை இயன்றளவு செய்து சித்தாந்தச் சைவச்செந்நெறியினை வையமெலாம் வாழுமாறு வளர்ப்பார்களாக. அம்மை அம்பலவாணர் திருவருள் புரிவராக.

கவுணியன் அச்சகம் ;
கு. ஆறுமுக நயினார்.

உ

சிவமயம்

சைவ சமயாசிரியர்

நால்வரருளின பாக்களுக்குரிய நான்கு திருப்பெயர்கள்

மாவாய்மைச் சம்பந்தர் வாக்கரையர் வன்றெண்டர் வாதவூரர், பூவாயின் றேறலெனு நான்மறைத் திருக்கடைக் காப்பு சிர்சால், தேவாரந் திருப்பாட்டு திருவாச கம்முதலாச் செப்பு கின்ற, நாவாயே நாவாயாம் பவக்கடலைக் கடந்து முத்திநகர்சேர் தற்கே.

சைவ சமயாசிரியர் நால்வரின் வயது

அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பிய நாலெட்டிற் றெய்வீக—மிப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினு றறி.

சைவ சமயாசிரியர் நால்வர் திருவடியடைந்த திருநாள்

சித்திரைச் சதய மப்பர் சிறந்தவை காசி மூலம்
அத்தரைப் பணிசம் பந்த ரானிமா மகத்தி லந்த
முத்தமிழ் வாத வூரர் முதியநல் லாடி தன்னில்
சுத்தமாஞ் சோதி நாளிற் சுந்தரர் கயிலை சேர்ந்தார்

சைவ சமயாசிரியர் நால்வரும், சேக்கிழாரும் திருவடியடைந்த திருநாள்

பாடிய சம்பந்தர் வைகாசி மூலம் பயிலுமப்பர்
நீடிய சித்திரை மாதச் சதய நிறைவன்றெண்டர்
ஆடியிற் சோதி திருவாத வூரர் நல் லானிமகம்
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசஞ் சிறந்தனரே.

சைவ சந்தானுசிரியர் நால்வர் திருவடியடைந்த திருநாள்

சித்திரை யத்த முமாபதி யாவணித் திங்களனில்
உத்திரஞ் சீர்கொண் மறைஞான சம்பந்த ரோதுகன்னிச்
சுத்தமெய்ப் பூர மருணந்தி யைப்பசிச் சோதிதன்னில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருநெறித் தமிழ்வேதமாகிய

பன்னிரு திருமுறைத் திரட்டு

சைவ சமயாச்சாரியர் நால்வர் வணக்கம்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர்திருத் தாள்போற்றி.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

முதல் திருமுறை.

பிரமபுரம் அற்புத பதிகம் பண்-நட்டபாடை

தோடுடையசெவியன் விடையேறி ஓர் தூவெண் மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடி பூசி என்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே.

முற்றலாமையிளநாகமோ டேனமுளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடு கலனுப்பலி தேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்த பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே.

அருநெறியமறை வல்ல முனியகன் பொய்கை அலர்மேய
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் தன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே.

வேணுபுரம் திருச்சிற்றம்பலம் பண்-நட்டபாடை

வண்டார்குழ லரிவையொடும் பிரியாவகை பாகம்
பெண்தான்மிக ஆனான்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்தாமரை மலராளுறை தவளம்நெடு மாடம்
விண்தாங்குவ போலும்மிகு வேணுபுரம் அதுவே.

வேதத்தொலி யானும்மிகு வேணுபுரந் தன்னைப்
பாதத்தினின் மனம்வைத்தெழு பந்தன் தனபாடல்
ஏதத்தினை யில்லா இவை பத்தும்இசை வல்லார்
கேதத்தினை யில்லார்சிவ கெதியைப்பெறு வாரே.

திருக்கோலக்கா அற்புத பதிகம் பண்-தக்கராகம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவ மென்கொலோ.

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவுளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே.

திருவோத்தூர் அற்புத பதிகம் பண்-பழந்தக்கராகம்

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
யேத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தி ரும்ம குணங்களே.

குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும் புகலியுள் ஞானசம் பந்தன்சொல்
விரும்பு வார்வினை வீடே.

திருவேற்காடு திருச்சிற்றம்பலம் பண்-பழந்தக்கராகம்

ஒள்ளி துள்ளக் கதிக்கா மிவனொளி
வெள்ளி யானுறை வேற்காடு
உள்ளி யாருயர்ந் தாரிவ் வுலகினில்
தெள்ளி யாரவர் தேவரே.

ஆடல் நாகம் அசைத்தள வில்லதோர்
வேடங் கொண்டவன் வேற்காடு
பாடியும் பணிந்தா ரிவ்வுலகினில்
சேட ராகிய செல்வரே.

விண்ட மாம்பொழில் சூழ்தரு வேற்காடு
கண்டு நம்பன் கழல்பேணிச்
சண்பை ஞானசம் பந்தன செந்தமிழ்
கொண்டு பாடக் குணமாமே.

திருக்கோளிலி திருச்சிற்றம்பலம் பண்-பழந்தக்கராகம்

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறம்அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலிஎம் பெருமானே.

நம்பனை நல் லடியார்கள் நாமுடைமா டென்றிருக்கும்
கொம்பனையாள் பாகனெழிற் கோளிலியெம் பெருமானை
வம்பமருந் தண்காழிச் சம்பந்தன் வண்தமிழ் கொண்டு
இன்பமர வல்லார்க ளெய்துவர்க ளீசனையே.

திருப்பழனம் திருச்சிற்றம்பலம் பண்-தக்கேசி

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியி னுரிதோலார்
நாதாஎனவும் நக்காஎனவும் நம்பா எனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே.

வேய்முத்தோங்கி விரைமுன் பரக்கும் வேணுபுரந்தன்னுள்
நாவுய்த்தனைய திறலால்மிக்க ஞானசம்பந்தன்
பேசற்கினிய பாடல்பயிலும் பெருமான் பழனத்தை
வாயிற்பொலிந்த மாலைபத்தும் வல்லார் நல்லாரே.

திருவண்ணாமலை திருச்சிற்றம்பலம் பண்-தக்கேசி

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின்னிரையோடு
ஆமாம்பிணைவந் தணையுஞ்சாரல் அண்ணாமலையாரே.

அல்லாடரவம் இயங்குஞ்சாரல் அண்ணாமலையாரை
நல்லார் பரவப் படுவான்காழி ஞானசம்பந்தன்
சொல்லால்மலிந்த பாடலான பத்தும் இவைகற்று
வல்லாரெல்லாம் வானோர்வணங்க மன்னி வாழ்வாரே.

கோயில் திருச்சிற்றம்பலம் பண்-குறிஞ்சி

கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தார்பாட வல்லார் நல்லாரே.

திருவீழிமிழலை அற்புத பதிகம் பண்-குறிஞ்சி

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே.

காழி மா நகர், வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல், தாழு மொழிகளே.

திருச்சிராப்பள்ளி திருச்சிற்றம்பலம் பண்-குறிஞ்சி

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள் ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடை யானைச் சிராப்பள்ளி
குன்றுடையானைக் கூறஎன் னுள்ளங் குளிரும்மே.

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்த னலமிகுபாட லிவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடுமன்னி வாழ்வாரே.

திருவையாறு திருச்சிற்றம்பலம் பண்-மேகராகக்குறிஞ்சி

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு ஐமேலுந்தி, அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வா னமருங்கோயில், வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச், சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க் குந் திருவையாறே.

அன்னமலி பொழில்புடைசூழ் ஐயாற்றெம்பெருமானை யந் தண்காழி, மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான சம்பந்தன் மருவு பாடல், இன்னிசையா லிவைபத்து மிசையுங்கா லீசனடி யேத்துவார்கள், தன்னிசையோ டமருலகில் தவநெறிசென் றெய்துவார் தாழாதன்றே.

திருவீழிமிழலை திருச்சிற்றம்பலம் பண்-மேகராகக்குறிஞ்சி

ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங் கீரிருவர்க் கிரங்கிநின்று, நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர் நெறியளித் தோன் நின்றகோயில், பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றேத்தும் ஓசைகேட்டு, வேரிமலி பொழிற்கிள்ளை வேதங் கள் பொருட்சொல்லும் மிழலையாமே.

உரைசேரும் எண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனிபேதம், நிறைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின் றான்கோயில், வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல நடமாட வண்டுபாட, விரைசேர்பொன் இதழிதர மென்காந்தள் கையேற்கும் மிழலையாமே.

ஆறுடு சடைமுடியன் அனலாடும் மலர்க்கையன் இமயப் பாவை, கூறுடு திருவுருவன் கூத்தாடுங் குணமுடையோன் குளிருங் கோயில், சேருடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்தவண்டு, வேருய வுருவாகிச் செவ்வழிநற் பண்பாடும் மிழலையாமே.

சீர்காழி பண்-மேகராகக்குறிஞ்சி

சேவுயருந் திண்கொடியான் திருவடியே சரணென்று சிறந்தஅன்பால், நாவியலும் மங்கையொடு நான்முகன்தான் வழிபட்ட நலங்கொள்கோயில், வாவிதொறும் வண்கமலம் முகங்காட்டச் செங்குமுதம் வாய்கள்காட்டக், காவியிருங் கருங்குவளை கருநெய்தல் கண்காட்டுங் கழுமலமே.

கற்றவர்கள் பணிந்தேத்துங் கழுமலத்து ளீசன்தன் கழல் மேல் நல்லோர், நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்பந் தன்தான் நயந்துசொன்ன, சொற்றுணையோ ரைந்திரு டைந்திவை வல்லார் தூமலராள்துணைவராகி, முற்றுலகமது வாண்டு முக்கணனடிசேர முயல்கின்ருரே.

திருப்பராய்த்துறை பண்-மேகராகக்குறிஞ்சி

நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதோர் கோலமாய்ப்
பாறு சேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறு சேர்சடை அண்ணலே.

செல்வம் மல்கிய செல்வர் பராய்த்துறை
செல்வ மேற் சிதை யாதன
செல்வன் ஞானசம் பந்தன செந்தமிழ்
செல்வ மாமிவை செப்புவே.

திருமருகலும், திருச்செங்காட்டங்குடியும் பண்-நட்டபாடை

அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர் நாளும் அடிபரவ, மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்தசொல் லாய், செங்கய லார்புனற் செல்வம்மல்கு சீர்கொள் செங்காட் டங் குடியதனுள், கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே.

நாலுங் குலைக்கமு கோங்குகாழி ஞானசம்பந்தன் நலந் திகழும், மாலின் மதிதவழ் மாடமோங்கும் மருகலின் மற்றதன் மேல்மொழிந்த, சேலுங் கயலுந் திளைத்தகண்ணார் சீர்கொள் செங்காட்டங் குடியதனுள், சூலம்வல்லான்கழ லேத்துபாடல் சொல்ல வல்லார்வினை யில்லையாமே.

இரண்டாந் திருமுறை.

திருமருகல் அற்புத பதிகம் பண்-இந்தளம்

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே.

வயஞா னம்வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலால்
இயல்ஞா னசம்பந் தனபா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே.

திருமறைக்காடு அற்புத பதிகம் பண்-இந்தளம்

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
இதுநன்கிறை வைத்தருள் செய்க எனக்குன்
கதவந் திருக் காப்புக் கொள்ளுங் கருத்தாலே.

காழிந் நகரான் கலைஞான சம்பந்தன்
வாழிம் மறைக் காடனை வாய்ந்தறி வித்த
ஏழின் இசைமாலை யிரைந்திவை வல்லார்
வாழி யுலகோர் தொழவான் அடைவாரே.

திருப்பிரமபுரம் திருச்சிற்றம்பலம் பண்-சீகாமரம்

எம்பிரான் எனக்கமுத மாவானுந் தன்னடைந்தார்
தம்பிரான் ஆவானுந் தழலேந்து கையானுங்
கம்பமா கரியுரித்த காபாலி கறைக்கண்டன்
வம்புலாம் பொழிற்பிரம புரத்துறையும் வானவனே.

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்
கிங்கேயென் றருள்புரியும் எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக் குளிர்பிரம புரத்துறையுஞ்
சங்கேயொத் தொளிர்மேனிச் சங்கரன்தன் தன்மைகளே.

தன்னடைந்தார்க் கின்பங்கள் தருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற்பிரம புரத்துறையுங் காவலனை
முன்னடைந்தான் சம்பந்தன் மொழிபத்து மிவைவல்லார்
பொன்னடைந்தார் போகங்கள் பலவடைந்தார் புண்ணியரே.

திருச்சாய்க்காடு திருச்சிற்றம்பலம் பண்-சீகாமரம்

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்தாள் சார்ந்தாரே.

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

நொம்பைந்து புடைத்தொல்கு நூபுரஞ்சேர் மெல்லடியார்
அம்பந்தும் வரிக்கழலும் அரவஞ்செய் பூங்காழிச்
சம்பந்தன் தமிழ்பகர்ந்த சாய்க்காட்டுப் பத்தினையும்
எம்பந்த மெனக்கருதி யேத்துவார்க் கிடர்கெடுமே.

திருப்புள்ளிருக்குவேளூர் திருச்சிற்றம்பலம் பண்-சீகாமரம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானூர்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

செடியாய வுடல்தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழி கவுணியன் சம்பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுபிறப்பே.

திருமயிலாப்பூர் அற்புத பதிகம் பண்-சீகாமரம்

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

கானமர் சோலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்தன் நலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே.

திருஆமாத்தூர் திருச்சிற்றம்பலம் பண்-சீகாமரம்

குன்ற வார்சிலை நாணராவரி வாளிகூரெரி காற்றின் மும்மதில்
வென்றவா ரெங்ஙனே விடையேறும் வேதியனே [ணைமேல்
தென்றலார்மணி மாடமாளிகை சூளிகைக்கெதிர் நீண்டபெண்
அன்றில் வந்தணையும் ஆமாத்தூ ரம்மானே.

வாடல் வெண்டலை மாலையார்த்து மயங்கிருள்ளெரி யேந்திமா
ஆடல் மேயதென்னன் ஆமாத்தூ ரம்மானை [நடம்
கோடலுகை மரும்பு பைம்பொழிற் கொச்சையாரிறை ஞானசம்
பாடல் பத்தும்வல்லார் பரலோகஞ் சேர்வாரே. [பந்தன்

திருவெண்காடு பண்-சீகாமரம்

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ள நினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மை தோயாவாந் தீவினையே.

சக்கரமாற் கீந்தானுஞ் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமே லசைத்தானு மடைந்தயிரா வதம்பணிய
மிக்கதனுக் கருள்சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கு
முக்குள நன்குடையானு முக்கணுடை யிறையவனே.

திருஆலவாய் அற்புத பதிகம் பண்-காந்தாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திரு நீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆலவாயான் திரு நீறே.

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவாயான் திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

கோளறு பதிகம் பண்-பியந்தைக்காந்தாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன் மிகநல்ல வீணைதடவி, மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென் உளமேபுகுந்த அதனால், ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனிபாம்பி ரண்டும் உடனே, ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.

தேனமர் பொழிற்கொளாலை விளைசெந்நெல் துன்னி வளர் செம்பொன் எங்கும் திகழ, நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து மறைஞான ஞானமுனிவன், தானுறு கோளுநாளும்அடியாரை வந்து நலியாதவண்ணம் உரைசெய், ஆனசொல் மாலை யோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே.

திருவாரூர் திருச்சிற்றம்பலம் பண்-காந்தாரம்

பவனமாய்ச் சோடையாய் நாவெழாப்பஞ்சுதோய்ச் சட்டவுண்
சிவனதாள் சிந்தியாப் பேதைமார் போலநீ வெள்கினுயே [டு
கவனமாய்ப் பாய்வதோர் ஏறுகந் தேறிய காளகண்டன் [சே.
அவனதா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல்நெஞ்

தந்தையார்போயினுர் தாயரும்போயினுர் தாமும்போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்ருர்
கொண்டுபோவார், எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா
லேழைநெஞ்சே, அந்தணு ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்சல்நெஞ்சே.

பல்லிதழ் மாதவி அல்லிவண்டு யாழ்செயுங் காழியூரன்
நல்லவே நல்லவே சொல்லிய ஞானசம் பந்தன் ஆரூர்
எல்லியம் போதெரி யாடுமெம் ஈசனை யேத்து பாடல்
சொல்லவே வல்லவர் தீதிலார் ஓதநீர் வையகத்தே.

நெல்வாயிலரத்துறை அற்புத பதிகம் பியந்தைக்காந்தாரம்

எந்தை யீசனெம் பெருமா னேறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்ருல்
கந்த மாமல ருந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம்அருளே

கறையி னுர்பொழில் சூழ்ந்த காழியுள் ஞானசம் பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த அரத்துறை யடிகள்தம் அருளை
முறைமையாற்சொன்ன பாடல் மொழியும்மாந்தர் தம்வினைபோ
பறையும் ஐயுறவில்லைப் பாட்டிவை பத்தும் வல்லார்க்கே.[ய்ப்

திருவலஞ்சுழி பண்-நட்டராகம்

என்ன புண்ணியஞ் செய்தனைநெஞ்சமே யிருங்கடல்வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனுலே

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம் பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்திசை கற்றுவல் லார்சொலக் கேட்டுகந் தவர்தம்மை
வாதியாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம்வந்தடையாவே

திருக்கேதாரம் திருச்சிற்றம்பலம் பண்-செவ்வழி

தொண்டரஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யுமிட மென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே.

வாய்ந்தசெந்நெல் விளைகழனி மல்கும்வயற் காழியான்
ஏய்ந்தநீர்க்கோட் டிமையோ ருறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்து சொன்ன அருந்தமிழ்கள் பத்தும்இசை வல்லார்
வேந்தராகி யுலகாண்டு வீடுகதி பெறுவரே.

திருநாகைக்காரோணம் பண்-செவ்வழி

கூனல்திங்கட் குறுங்கண்ணி கான்றநெடு வெண்ணிலா
ஏனற்பூத்தம் மராங்கோதை யோடும்விரா வுஞ்சடை
வானநாடன் அமரர் பெருமாற்கிட மாவது
கானல்வேலி கழிசூழ் கடல்நாகைக் காரோணமே.

மல்குதண்பூம் புனல்வாய்ந் தொழுகும்வயற் காழியான்
நல்லகேள்வித் தமிழ்ஞான சம்பந்தன் நல்லார்கள்முன்
வல்லவாறே புனைந்தேத்துங் காரோணத்து வண்தமிழ்
சொல்லுவார்க்கும் இவைகேட்பவர்க்குந் துயரில்லையே.

மூன்றாந் திருமுறை

கோயில் திருச்சிற்றம்பலம் பண்-காந்தாரபஞ்சமம்

ஆடினாய்நறு நெய்யொடுபால்தயிர் அந்தணர்பிரி யாதசிற்றம்பலம், நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே, பாடினாய் மறையோடுபல்கீதமும் பல்சடைப்பனி கால்கதிர்வெண் திங்கள், சூடினா யருளாய் சுருங்கஎம் தொல்வினையே.

நாறுபூம்பொழில் நண்ணியகாழியு ளுன்மறைவல்ல ஞான சம்பந்தன், ஊறும்இன் தமிழா லுயர்ந்தாருறை தில்லைதன்னுள், ஏறுதொல்புக ழேந்து சிற்றம்பலத் தீசனை யிசையாற்சொன்ன பத்திவை, கூறுமாறு வல்லார் உயர்ந்தாரொடுங் கூடுவரே.

திருவாவடுதுறை அற்புத பதிகம் பண்-காந்தாரபஞ்சமம்

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை யரனே.

அலைபுனல் ஆவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்இறையை
நலம்மிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் னேறுவர் நிலமிசை நிலையிலரே.

கொள்ளம்பூதூர் அற்புத பதிகம் பண்-காந்தாரபஞ்சமம்

கொட்டமே கமழுங் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

கொன்றைசேர் சடையான் கொள்ளம் பூதூர்
நன்று காழியுள் ஞானசம் பந்தன்
இன்றுசொன் மாலை கொண்டேத்த வல்லார்
என்றும் வானவ ரோடிருப் பாரே. [போய்

பஞ்சாக்கரப் பதிகம் பண்-காந்தாரபஞ்சமம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்
துற்றன வல்லவர் உம்ப ராவரே.

நமச்சிவாயப் பதிகம் முத்திப் பதிகம் பண்-கௌசிகம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

நம்புவாரவர் நாவில் நவிற்றினால்
வம்புநாண்மலர் வார்மது வொப்பது
செம்பொனார் திலகம் வுலகுக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே.

நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே.

திருஆலவாய் திருச்சிற்றம்பலம் பண்-கௌசிகம்

விடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

குற்றம்நீ குணங்கள்நீ கூடல்ஆல வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ யருத்தமின்ப மென்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மனே.

போயநீர் வளங்கொளும் பொருபுனற் புகலியான்
பாயகேள்வி ஞானசம் பந்தன் நல்ல பண்பினால்
ஆயசொல்லின் மாலைகொண் டாலவாயில் அண்ணலைத்
தீயதீர எண்ணுவார்கள் சிந்தையாவர் தேவரே.

திருப்பாசுரம் அற்புத பதிகம் பண்-கௌசிகம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தன்நல்ல
எல்லார்க ளும்பரவும் ஈசனை யேத்துபாடல்
பல்லார்க ளும்மதிக்கப் பாசுரஞ் சொன்னபத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே.

திருவொற்றியூர் பண்-பஞ்சமம்

விடையவன் விண்ணுமண்ணுந் தொழநின்றவன் வெண் மழுவாட், படையவன் பாய்புலித்தோல் உடைகோவணம்பல் கரந்தைச், சடையவன் சாமவேதன் சசிதங்கிய சங்கவெண் தோல், உடையவன் ஊனமில்லி யுறையும்மிடம் ஒற்றியூரே.

ஒண்பிறை மல்குசென்னி யிறைவன்னுறை யொற்றியூரைச்
சண்பையர் தந்தலைவன் தமிழ்ஞானசம் பந்தன்சொன்ன
பண்புனை பாடல்பத்தும் பரவிப்பணிந் தேத்தவல்லார்
விண்புனை மேலுலகம் விருப்பெய்துவர் வீடெளிதே.

திருக்காளத்தி பண்-சாதாரி

வானவர்கள் தானவர்கள் வாதைபட வந்ததொரு மாகடல் விடம், தானமுது செய்தருள் புரிந்தசிவன் மேவுமலை தன்னை வினவில், ஏனம்இன மானினொடு கிள்ளைதினை கொள்ள எழில் லார்கவணினால், கானவர்தம் மாமகளிர் கனகமணி விலகுகா ளத்திமலையே.

காடதிட மாகநட மாடுசிவன் மேவுகா ளத்திமலையை, மாடமொடு மாளிகைகள் நீடுவளர் கொச்சைவயம் மன்னுதலை வன், நாடுமலி நீடுபுகழ் ஞானசம் பந்தனுரை நல்லதமிழின், பாடலொடு பாடுமிசை வல்லவர்கள் நல்லர்பர லோகமெளிதே

திருநெல்வேலி பண்-சாதாரி

மருந்தவை மந்திர மறுமைநன் னெறியவை மற்றுமெல்லாம், அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே, பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன் சொரிதரத் துன்றுபைம்பூம், செருந்திசெம் பொன்மலர் திருநெல்வேலி யுறை செல்வர்தாமே.

பெருந்தண்மா மலர்மிசை யயனவன் அனையவர் பேணுகல்வித் திருந்துமா மறையவர் திருநெல்வேலியுறை செல்வர்தம்மைப் பொருந்துநீர்த் தடமல்கு புகலியுள் ஞானசம் பந்தன்சொன்ன அருந்தமிழ் மாலைகள் பாடியா டக்கெடு மருவினையே.

திருஆலவாய் பண்-பழம்பஞ்சுரம் திருவியமகம்

ஆலநீழ லுகந்த திருக்கையே யானபாட லுகந்த திருக் கையே, பாலின்நேர்மொழி யாளொரு பங்கனே பாதமோதலர் சேர்புர பங்கனே, கோலநீறணி மேதகு பூதனே கோதிலார் மனம் மேவிய பூதனே, ஆலநஞ்சமு துண்ட களத்தனே ஆல வாயுறை யண்டர்க ளத்தனே.

ஈனஞானிகள் தம்மொடு விரகனே யேறுபல்பொருள் முத் தமிழ் விரகனே, ஆனகாழியுள் ஞானசம்பந்தனே ஆலவாயி னின் மேயசம்பந்தனே, ஆனவானவர் வாயினுளத்தனே அன்பரானவர் வாயினுளத்தனே, நானுரைத்தன செந்தமிழ் பத்துமே வல்லவர்க்கிவை நற்றமிழ்பத்துமே.

திருப்பல்லவனீச்சரம் பண்-பழம்பஞ்சுரம்

பரசுபாணியர் பாடல்வீணையர் பட்டினத்துறை பல்லவனீச் சரத் தரசுபேணி நின்றார் இவர் தன்மை யறிவாரார்.

பட்டநெற்றியர் நட்டமாடுவர் பட்டினத்துறை பல்லவனீச்சரத் திட்டமா யிருப்பார் இவர் தன்மை யறிவாரார்.

பச்சை மேனியர் பிச்சைகொள்பவர் பட்டினத்துறை பல்லவ னீச்சரத் திச்சையா யிருப்பார் இவர் தன்மை யறிவாரார்.

வானமாள்வதற் கூனமொன்றிலை மாதர்பல்லவ னீச்சரத்தானை ஞானசம்பந்தன் நற்றமிழ் சொல்ல வல்லவர் நல்லவரே.

திருக்கழுமலம் பண்-பழம்பஞ்சுரம்

உற்றுமைசேர்வது மெய்யினையே யுணர்வது நின்னருள் மெய்யினையே, கற்றவர்காய்வது காமனையே கனல்விழிகாய்வது காமனையே, அற்றமறைப்பது முன்பணியே யமரர்கள்செய்வது முன்பணியே, பெற்றுமுகந்தது கந்தனையே பிரமபுரத்தை யுகந்தனையே.

பருமதின் மதுரைமன் னவையெதிரே பதிகமதெழுதிலை யவையெதிரே, வருநதியிடைமிசை வருகரனே வசையொடு மலர்கெடவருகரனே, கருதலிலிசைமுர றருமருளே கழுமலமமரிறை தருமருளே, மருவியதமிழ்விர கனமொழியே வல்லவர்தம்மிடர் திடமொழியே.

திருஆலவாய் பண்-கொல்லி

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பால்நல்வாயொரு பாலன் ஈங்கிவன் என்றுநீபரி வெய்திடேல்
ஆனை மாமலை யாதியாய இடங்களிற் பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே.

எக்கராம்அமண் கையருக்கெளி யேனலேன்திரு ஆலவாய்ச், சொக்கனென்னு ளிருக்கவே துளங்குமுடித்தென்னன் முன்னிவை, தக்கசீர்ப்புக லிக்குமன்தமிழ் நாதன்ஞானசம் பந்தன்வாய், ஒக்கவேயுரை செய்தபத்தும் உரைப்பவர்க்கிடர் இல்லையே.

திருக்கழுமலம் பண்-கொல்லி

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோ டிருந்தஎம்பி ரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்
விரும்புவா ரவர்கள்போய் விண்ணுல காள்வரே.

திருக்காளத்தி பண்-கொல்லி

சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி யென்மனத் துள்ளவே.

அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி
வட்டவார் சடையனை வயலணி காழியான்
சிட்டநான் மறைவல ஞானசம் பந்தன்சொல்
இட்டமாப் பாடுவார்க் கில்லையாம் பாவமே.

திருஏடகம் அற்புத பதிகம் பண்-கொல்லி

வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலார் ஏடகத் தொருவனே.

கோடுசந் தனமகில் கொண்டிழி வைகைநீர்
ஏடுசென் றணைதரும் ஏடகத் தொருவனை
நாடுதென் புகலியுள் ஞானசம் பந்தன
பாடல்பத் திவைவல்லார்க் கில்லையாம் பாவமே.

திருஆலவாய் பண்-புறநீர்மை

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம் மடமானி, பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாள் தொறும் பரவப், பொங்கழ லுருவன் பூதநா யகனுல் வேதமும் பொருள்களும் அருளி, அங்கயற் கண்ணி தன்னெடும் அமர்ந்த ஆலவா யாவதும் இதுவே.

பன்னலம் புணரும் பாண்டிமா தேவி குலச்சிறை யெனு மிவர்பணியும், அந்நலம்பெறுசீர் ஆலவா யீசன் திருவடி யாங் கவை போற்றிக், கன்னலம் பெரிய காழியுள் ஞான சம்பந்தன் செந்தமிழிவைகொண்டு, இன்னலம் பாட வல்லவர் இமையோர் ஏத்தவீற் றிருப்பவர் இனிதே.

நல்லூர்ப்பெருமணம் முத்திப் பதிகம் பண்-அந்தாளிக்குறிஞ்சி

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே.

நறும்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்கு
அறும்பழி பாவம் அவலம் இலரே.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

நான்காந் திருமுறை.

திருவதிகைவிரட்டானம் அற்புத பதிகம் பண்-கொல்லி

கூற்ருயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்ருயடிக்கே யிரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றுதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
விரட்டா னத்துறை யம்மானே.

போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்கா டரங்காநட மாடவல்லாய்
ஆர்த்தா னரக்கன்றனை மால்வரைக் கீழ்
அடர்த்திட் டருள்செய்த வதுகருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல்சூ ழதிகைக் கெடில
விரட்டா னத்துறை யம்மானே.

திருவதிகைவிரட்டானம் அற்புத பதிகம் பண்-காந்தாரம்

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரன்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.

நரம்பெழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை
உரங்க ளெல்லாங் கொண்டெடுத்தா னென்பது மொன்றுமலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்பொழில் விரட்டஞ்
நிரம்பு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம் [சூழ்ந்து
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.

திருவையாறு அற்புத பதிகம் பண்-காந்தாரம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

வளர்மதிக் கண்ணியி ஞனை வார்குழ லாளொடும் பாடிக்
களவு படாததொர் காலங் காண்பான் கடைக்கணிக் கின்றே
அளவு படாததொ ரன்போ டையா றடைகின்ற போது [ன்
இளமண நாகு தழுவி யேறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

திருவாரூர் பண்-காந்தாரம்

பாடிளம் பூதத்தி னுனும் பவளச்செவ் வாய்வண்ணத் தானும்
கூடிள மென்முலை யாளை கூடிய கோலத்தினுனும்
ஓடிள வெண்பிறை யானும் ஒளிதிகழ் சூலத்தி னுனும்
ஆடிளம் பாம்பசைத் தானு மாரூ ரமர்ந்த வம்மானே.

நரியைக் குதிரை செய்வானும் நரகரைத் தேவு செய்வானும்
விரதங் கொண்டாட வல்லானும் விச்சின்றி நாறு செய்வானும்
முரசதிர்ந் தானை முன்னோட முன்பணிந் தன்பர்க ளேத்த
அரவரைச் சாத்தி நின்ருனு மாரூ ரமர்ந்த வம்மானே.

பையஞ் சுடர்விடு நாகப் பள்ளிகொள்வா னுள்ளத் தானும்
கையஞ்சு நான்குடை யானைக் கால்விர லாலடர்த் தானும்
பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ்புரிந் தார்க்கருள் செய்
ஐயஞ்சி னப்புறத் தானு மாரூ ரமர்ந்த வம்மானே. [யும்

திருவாரூர் பழமொழிப் பதிகம் பண்-காந்தாரம்

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான் தாள் தொழாதே, உய்யலா மென்றெண்ணி யுரிதூக்கி யுழிதந்தென் னுள்ளம் விட்டுக், கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலு மாரூரரைக், கையினுற் ருெழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே.

மறுத்தானொர் வல்லரக்க னிரைந்து முடியிளெடு தோளுந் தாளும், இறுத்தானை யெழின்முளரித் தவிசின்மிசை யிருந்தான்றன் தலையிலொன்றை, அறுத்தானை யாரூரி லம்மானை யாலாலமுண்டு கண்டம், கறுத்தானைக் கருதாதே கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்த வாறே.

திருக்கச்சியேகம்பம் பண்-காந்தாரம்

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே.

ஆகம்பத் தரவணையான் அயன்அறிதற் கரியானைப்
பாகம்பெண் ணன்பாக மாய்நின்ற பசுபதியை
மாகம்ப மறையோதும் இறையானை மதிற்கச்சி
ஏகம்ப மேயானை என்மனத்தே வைத்தேனே.

அடுத்தானை யுரித்தானை யருச்சுனர்க்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தே வைத்தேனே.

திருஅங்கமாலை பண்-சாதாரி

தலையே நீவணங்காய்—தலை மாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத் தலையே நீவணங்காய்

கண்காள் காண்மின்களோ—கடல்நஞ்சுண்ட கண்டன்
றன்னை, எண்டோள் வீசிநின்றாடும் பிரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ

செவிகாள் கேண்மின்களோ—சிவன் எம்மிறை செம்பவளம்
எரிபோல் மேனிப்பி ரான்றிற மெப்போதுஞ் செவிகாள்
கேண்மின்களோ

மூக்கே நீமுரலாய்—முதுகாடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கைமணாளனை மூக்கே நீமுரலாய்

வாயே வாழ்த்துகண்டாய்—மதயானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான்றன்னை வாயே வாழ்த்து
கண்டாய்

நெஞ்சே நீநினையாய்—நிமிர்புன்சடை நின்மலனை
மஞ்சாடும்மலை மங்கைமணாளனை நெஞ்சே நீநினையாய்

கைகாள் கூப்பித்தொழீர்—கடிமாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரையார்த்த பரமனைக் கைகாள்கூப்பித்
தொழீர்

ஆக்கையாற் பயனென்—அரன்கோயில் வலம்வந்து
பூக்கையாலட்டிப் போற்றியென்னுதவிவ் ஆக்கையாற்பய
னென்

கால்களாற் பயனென்—கறைக்கண்ட னுறைகோயில்
கோலக்கோபுரக் கோகரணஞ்சூழாக் கால்களாற்பயனென்

உற்றாராருளரோ—உயிர்கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால்நமக் குற்றாராருளரோ

இருமாந்திருப்பன்கொலோ—ஈசன்பல்கணத் தென்னப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங் கிறுமாந்திருப்பன்
கொலோ
தேடிக்கண்டுகொண்டேன்—திருமாலொடு நான்முகனும்
தேடித்தேடொணுத்தேவனை யென்னுளே தேடிக்கண்டு
கொண்டேன்.

நமச்சிவாய அற்புத பதிகம் பண்-காந்தாரபஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே.

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயபத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.

திருப்பழனம் பண்-பழந்தக்கராகம்

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானே.

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே.

விடந்தீர்த்த அற்புத பதிகம் பண்-இந்தளம்

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே.

பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொ லாமெயி றுந்நெறிந் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட்டான்றலை
பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே.

திருவாரூர் பண்-குறிஞ்சி

முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்த னூரு ராதிரை நாளா லதுவண்ணம்.

வீதிகள் தோறும் வெண்கொடி யோடு விதானங்கள்
சோதிகள் விட்டுச் சுடர்மா மணிக ளொளிதோன்றச்
சாதிக ளாய பவளமு முத்துத் தாமங்கள்
ஆதி யாரு ராதிரை நாளா லதுவண்ணம்.

பாரூர் பௌவத் தானைப் பத்தர் பணிந்தேத்தச்
சீரூர் பாட லாட லருத செம்மாப்பார்ந்
தோரூ ரொழியா துலக மெங்கு மெடுத்தேத்தும்
ஆரூ ரன்ற னாதிரை நாளா லதுவண்ணம்.

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற் பத்தி செய்கே னென்னைநீ யிகழ வேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் னாடல் காண்பா னடியனேன் வந்த வாறே.

கருத்தனாய்ப் பாடமாட்டேன் காம்பன தோளி பங்கா
ஒருத்தரா லறிய வொண்ணாத் திருவுரு வுடையசோதி
திருத்தமாந் தில்லை தன்னுள் திகழ்ந்தசிற் றம்பலத்தே
நிருத்தம்நான் காணவேண்டி நேர்பட வந்தவாறே.

நம்பனே யெங்கள்கோவே நாதனே யாதிமூர்த்தி
பங்கனே பரமயோகி யென்றென்றே பரவிநாளும்
செம்பொனே பவளக்குன்றே திகழ்மலர்ப் பாதங்காண்பான்
அன்பனே யலந்து போனே னதிகைவீ ரட்டனீரே.

நீதியால் வாழமாட்டேன் நித்தமுந் தூயேனல்லேன்
ஓதியு முணரமாட்டேன் உன்னையுள் வைக்கமாட்டேன்
சோதியே சுடரே யுந்தன் தூய்மலர் பாதங்காண்பான்
ஆதியே யலந்துபோனே னதிகைவீ ரட்டனீரே.

பழியுடை யாக்கை தன்னிற் பாழுக்கே நீரிறைத்து
வழியிடை வாழமாட்டேன் மாயமுந் தெளியகில்லேன்
அழிவுடைத் தாய வாழ்க்கை யைவரா லலைக்கப்பட்டுக்
கழியிடைத் தோணிபோன்றேன் கடவூர்வீ ரட்டனீரே.

தந்தையாய்த் தாயுமாகித் தரணியாய்த் தரணியுள்ளார்க்
கெந்தையு மென்ன நின்ற ஏழுல குடனுமாகி
எந்தையெம் பிரானே யென்றென் றுள்குவா ருள்ளத் தென்
சிந்தையுஞ் சிவமுமாவார் திருப்பயற் றூரனுரே. [றுஞ்

ஒருமுழ முள்ள குட்ட மொன்பது துறையுடைத்தாய்
அரை முழம் அதனகலம் அதனில்வாழ் முதலையைந்து
பெருமுழை வாய்தல்பற்றிக் கிடந்துநான் பிதற்றுகின்றேன்
கருமுகில் தவழுமாடக் கச்சியே கம்பனீரே.

வெள்ளத்தைச் சடையில்வைத்த வேதகீதன்றன் பாதம்
மெள்ளத்தா னடையவேண்டின் மெய்தரு ஞானத்தியால்
கள்ளத்தைக் கழியநின்றார் காயத்துக் கலந்துநின்று
உள்ளத்து ளொளியு மாகு மொற்றியூ ருடையகோவே.

ஓம்பினேன் கூட்டைவாளா உள்ளத்தோர் கொடுமைவைத்
காம்பிலா மூழைபோலக் கருதிற்றே முகக்கமாட்டேன் [துக்
பாம்பின் வாய்த் தேரைப்போலப் பலபல நினைக்கின்றேனை
ஓம்பிநீ உய்யக்கொள்ளா யொற்றியூ ருடையகோவே.

மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணு
துனையுனு முணர்வை நல்கா யொற்றியூ ருடையகோவே.

நீற்றினை நிறையப்பூசி நித்தலும் நியமஞ்செய்து
ஆற்றுநீர் பூரித்தாட்டும் அந்தண னரைக்கொல்வான்
சாற்றுநா ளற்றதென்று தருமரா சற்காய்வந்தக்
கூற்றினைக் குமைப்பர் போலுங் குறுக்கைவீ ரட்டனுரே.

தழைத்ததோ ராத்தியின்கீழ்த் தாபர மணலாற்கூப்பி
அழைத்தங்கே ஆவின்பாலைக் கறந்துகொண் டாட்டக்கண்டு
பிழைத்ததன் தாதைதாளைப் பெருங்கொடு மழுவால்விசக்
குழைத்ததோ ரமுதமீந்தார் குறுக்கைவீ ரட்டனுரே.

சிலந்தியும் ஆனைக்காவிற் றிருநிழற் பந்தர்செய்து
உலந்தவண் இறந்தபோதே கோச்செங்க ணானுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர்தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கைவீ ரட்டனுரே.

ஏறுட னேழடர்த்தா னெண்ணியா யிரம்பூக்கொண்டு
ஆறுடைச் சடையினானை அர்ச்சித்தா னடியிணைக்கீழ்
வேறுமோர் பூக்குறைய மெய்மலர்க் கண்ணைமிண்டக்
கூறுமோ ராழி யீந்தார் குறுக்கைவீ ரட்டனுரே.

காப்பதோர் வில்லும் அம்புங் கையதோர் இறைச்சிப்பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசம் ஆட்
திப்பெருங் கண்கள்செய்ய குருதிநீ ரொழுகத்தன்கண் [டித்
கோப்பதும் பற்றிக்கொண்டார் குறுக்கைவீ ரட்டனாரே.

நிறைமறைக் காடுதன்னில் நீண்டெரி தீபந்தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்றுதூண்ட
நிறைகடல் மண்ணும்விண்ணும் நீண்டவா னுலகமெல்லாங்
குறைவறக் கொடுப்பர் போலுங் குறுக்கைவீ ரட்டனாரே.

அணங்குமை பாகமாக அடக்கிய ஆதிமூர்த்தி
வணங்குவா ரிடர்கள் தீர்க்கும் மருந்துநல் லருந்தவத்த
கணம்புல்லர்க் கருள்கள்செய்து காதலா மடியார்க்கென்றும்
குணங்களைக் கொடுப்பர்போலுங் குறுக்கைவீ ரட்டனாரே.

மாயிரு ஞாலமெல்லாம் மலரடி வணங்கும்போலும்
பாயிருங் கங்கையாளைப் படர்சடை வைப்பர்போலும்
காயிரும் பொழில்கள்சூழ்ந்த கழுமல வூரர்க்கம் பொன்
ஆயிரங் கொடுப்பர்போலு மாவடுதுறையனாரே.

குறவிதோள் மணந்த செல்வக் குமரவேள் தாதையென்று
நறவிள நறுமென் கூந்தல் நங்கையோர் பாகத்தானைப்
பிறவியை மாற்றுவானைப் பெருவேளூர் பேணினானை
உறவினால் வல்லனாகி யுணருமா றுணர்த்துவேனே.

விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்து
எரிவினாற் சொன்னாரேனு மெம்பிராற் கேற்றதாகும்
பரிவினாற் பெரியோரேத்தும் பெருவேளூர் பற்றினானை
மருவிநான் வாழ்த்தி உய்யும் வகையது நினைக்கின்றேனே.

கோடிமா தவங்கள் செய்து குன்றினார் தம்மையெல்லாம்
விடவே சக்கரத்தா லெறிந்துபின் னன்புகொண்டு
தேடிமால் செய்தகோயில் திருவிரா மேச்சுரத்தை
நாடிவாழ் நெஞ்சமேநீ நன்னெறி யாகுமன்றே.

நலந்திகழ் வாயின் நூலாற் சருகிலைப் பந்தர்செய்த
சிலந்தியை யரசதாள அருளினா யென்று திண்ணங்
கலந்துடன் வந்துநின்தாள் கருதிநான் காண்பதாக
அலந்தனா னுலவாயி லப்பனே யருள்செயாயே.

ஓதிமா மலர்கள்தூவி உமையவள் பங்காமிக்க
சோதியே துளங்கு மெண்தோட் சுடர்மழுப் படையினானே
ஆதியே அமரர்கோவே அணியணா மலையுளானே
நீதியால் நின்னையல்லால் நினையுமா நினைவிலேனே.

ஆமலி பாலுநெய்யும் ஆட்டி யர்ச்சனைகள்செய்து
பூமலி கொன்றைசூட்டப் பொருததன் தாதைதாளைக்
கூர்மழு வொன்று லோச்சக் குளிர்சடைக் கொன்றைமாலைத்
தாமநற் சண்டிக் கீந்தார் சாய்க்காடு மேவினாரே.

பாலனாய்க் கழிந்தநாளும் பனிமலர்க்கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்தநாளும் மெலிவொடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்தநாளும் குறிக்கோளிலாது கெட்டேன்
சேலுலாம் பழனவேலித் திருக்கொண்டீச் சரத்துளானே.

கூடினா ருமைதன்னோடே குறிப்புடை வேடங்கொண்டு
சூடினார் கங்கையாளைச் சுவறிடு சடையர்போலும்
பாடினார் சாமவேதம் பைம்பொழிற் பழனமேயார்
ஆடினார் காளிகாண ஆலங்காட் டடிகளாரே.

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிரையநீ ரமையஆட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

விளக்கினார் பெற்றஇன்பம் மெழுக்கினார் பதிற்றியாகும்
துளக்கில்நன் மலர்தொடுத்தால் தூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ்சொன்னார்க் கடிகள்தாம் அருளுமாறே.

உடம்பெனும் மனையகத்து ளுள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயா லெரிகொள இருந்துநோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே.

அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை யுனக்கேதந்து
பங்கத்தைப் போகமாற்றிப் பாவித்தேன் பரமாநின்னைச்
சங்கொத்த மேனிச்செல்வா சாதல்நாள் நாயேனுன்னை
எங்குற்று யென்றபோதே இங்குற்றே னென்கண்டாயே,

வென்றிலேன் புலன்களைந்தும் வென்றவர் வளாகந்தன்னுள்
சென்றிலே னுதலாலே செந்நெறி யதற்குஞ்சேயேன்
நின்றுளே துளும்புகின்றேன் நீசனேன் ஈசனேயோ
இன்றுளேன் நாளையில்லே னென்செய்வான் தோன்றினேனே

மக்களே மணந்ததார மவ்வயிற் றவரை யோம்பும்
சிக்குளே யழுந்தி யீசன் திறம்படேன் தவமதோரேன்
கொப்புளே போலத்தோன்றி யதனுளே மறையக்கண்டும்
இக்களே பரத்தையோம்ப என்செய்வான் தோன்றினேனே.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

கருநட்ட கண்டனை யண்டத் தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதி லெய்யவல்லானைச் செந்தீமுழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக் கிறையைச் சிற்றம்பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர் கோனென்று வாழ்த்துவனே.

ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூன மில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தா னடிய வற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாயென்னு மெம்பெரு மான்றன் திருக்குறிப்பே.

முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின் நோக்கு முறுவலிப்பும்
துடிகொண்ட கையுந் துதைந்த வெண்ணீறுஞ் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித் தோலுமென் பாவிநெஞ்சில்
குடிகொண்டவா தில்லை யம்பலக் கூத்தன் குரைகழலே.

படைக்கலமாக வுன்னாமத் தெழுத்தஞ்செ னாவிற்கொண்டேன்
இடைக்கல மல்லே னெழுபிறப்பும் உனக்காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் றொழுதுவணங்கித் தூநீறணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச் சிற்றம்பலத் தரனே.

சிந்திப் பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந்தாடு மையாற னடித்தலமே.

ஈன்றாளும் ஆயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்று யுலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்று விமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே.

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றே னுனதருளால்
திருவாய் பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப்புலியூ ரரனே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்செய் பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றெ னுள்ளமு நானுங் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

போற்றுந் தகையன பொல்லா முயலகன் கோபப்புன்மை
ஆற்றுந் தகையன ஆறுசமயத் தவரவரைத்
தேற்றுந் தகையன தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றுந் தகையன இன்னம்ப ரான்ற னிணையடியே.

சிவனெனும் நாமந் தனக்கேயுடைய செம்மேனி யெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடுமாகில் அவன்தனையான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்து பன்னாளழைத்தால்
இவனெனைப் பன்னா ளழைப்பொழியானென் றெதிர்ப்படுமே.

பொருவிடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை மணாள னுலகுக்கெல்லாம்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
திருவடி யைக்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே.

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே.

சாட வெடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை
வீட வெடுத்தது காலனை நாரணன் நான்முகனும்
தேட வெடுத்தது தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதமன்றோ நம்மை யாட்கொண்டதே.

வேலைக்கடல் நஞ்சமுண்டு வெள்ளேற் றேறும் வீற்றிருந்த
மாலைச் சடையார்க் குறைவிட மாவது வாரிகுன்றா
ஆலைக் கரும்பொடு செந்நெற் கழனி யருகணைந்த
சோலைத் திருவொற்றியூரை யெப்போதுந் தொழுமின்களே.

கோவாய் முடுகி யடுதிறற் கூற்றங் குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண்டாய் முழங்குந் தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

குறிக்கொண் டிருந்து செந்தாமரை ஆயிரம் வைகல் வைகல்
நெறிப்பட இண்டை புனைகின்ற மாலை நிறையழிப்பான்
கறைக்கண்ட நீயொரு பூக்குறைவித்துக் கண் சூல்விப்பதே
பிறைத்துண்ட வார்சடையாய் பெருங்காஞ்சியெம் பிஞ்ஞகனே.

ஆராய்ந் தடித்தொண்ட ராணிப்பொ னாரூ ரகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்திரம் பாற்படுத்தான்
ஆரூர் நறுமலர் நாத னடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே.

வங்கமலி கடல்நாகைக் காரோணத்தெம் வானவனே
எங்கள் பெருமானொர் விண்ணப்ப முண்டது கேட்டருளீர்
கங்கை சடையுட் கரந்தாயக் கள்ளத்தை மெள்ளவுமை
நங்கை யறியிற் பொல்லாதுகண்டா யெங்கள் நாயகனே.

ஆரட்ட தேனும் இரந்துண் டகமக வன்றிரிந்து
வேரட்ட நிற்பித் திடுகின்ற தால்விரி நீர்ப்பரவைச்
சூரட்ட வேலவன் தாதையைச் சூழ்வய லாரதிகை
விரட்டத் தானை விரும்பா வரும்பாவ வேதனையே.

தன்னைச் சரணென்று தாளடைந்தேன் தன் அடியடையப்
புன்னைப் பொழில்புக லூரண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் தென்வினை கட்டறுத் தேழ்நரகத்
தென்னைக் கிடக்கலொட் டான்சிவ லோகத் திருத்திடுமே.

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றி
என்னாவி காப்பதற் கிச்சையுண்டே லிருங் கூற்றகல [செய்யும்
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே.

கடவுந் திகிரி கடவா தொழியக் கயிலையுற்றான்
படவுந் திருவிர லொன்றுவைத்தாய் பனி மால்வரைபோல்
இடபம் பொறித்தென்னை யேன்றுகொள்ளா யிருஞ்சோலைதிங்கள்
தடவும் கடந்தையுள் தூங்கானை மாடத்தெந் தத்துவனே.

தரியா வெகுளிய னாய்த்தக்கன் வேள்வி தகர்த்துகந்த
எரியார் இலங்கிய சூலத்தி னான் இமை யாதமுக்கட்
பெரியான் பெரியார் பிறப்பறுப் பான்என்றுந் தன்பிறப்பை
அரியான் அடிநிழற் கிழதன்றோ என்றன் ஆருயிரே.

களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் நின்றஇப் பத்தரைக் கோதில் செந்
தெளித்துச் சுவையமு தூட்டி யமரர்கள் சூழிருப்ப [தேன்
அளித்துப் பெருஞ்செல்வ மாக்கும் ஐயாறன் அடித்தலமே.

சித்தத் துருகிச் சிவனெம் பிரானென்று சிந்தையுள்ளே
பித்துப் பெருகப் பிதற்றுகின் றார்பிணி தீர்த்தருளாய்
மத்தத் தரக்கன் இருபது தோளும் முடியுமெல்லாம்
பத்துற் றுறநெரித் தாய்எம்மை ஆளும் பசுபதியே.

விண்ணகத்தான் மிக்க வேதத் துளான் விரிநீருடுத்த
வண்ணகத்தான் திருமாலகத்தான் மருவற் கினிய
பண்ணகத்தான் பத்தர் சித்தத்து நான் பழநாயடியேன்
கண்ணகத்தான் மனத்தான் சென்னியான்எங் கறைக்கண்டனே.

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண்டு
ஊனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

துறக்கப் படாத வுடலைத் துறந்துவெந் தூதுவரோடு
இறப்பன் இறந்தால் இருவிசும் பேறுவன் ஏறிவந்து
பிறப்பன் பிறந்தாற் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோவென் றென்னுள்ளங் கிடந்து மறுகிடுமே.

மேலு மறிந்திலன் நான்முகன் மேற்சென்று கீழிடந்து
மாலு மறிந்திலன் மாலுற்ற தேவழி பாடுசெய்யும்
பாலன் மிசைச்சென்று பாசம் விசிறி மறிந்தசிந்தைக்
கால னறிந்தா னறிதற் கரியான் கழலடியே.

பொன்னை வகுத்தன்ன மேனியனே புணர்மென் முலையாள்
தன்னை வகுத்தன்ன பாகத்தனே தமியேற் கிரங்காய்
புன்னை மலர்த்தலை வண்டுறங்கும் புகலூரரசே
என்னை வகுத்திலையே லிடும்பைக்கிடம் யாதுசொல்லே.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாந் திருமுறை

கோயில் திருச்சிற்றம்பலம் திருக்குறுந்தொகை

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே.

அல்ல லென்செயும் அருவினை யென்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனுர்க்
கெல்லை யில்லதோ ரடிமை பூண்டேனுக்கே.

மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் திருமலை
அதிர ஆர்த்தெடுத் தான்முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே.

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந் துய்வனே.

ஓங்கு மால்வரை யேந்தலுற் ருன்சிரம்
விங்கி விம்முற வூன்றிய தாளினன்
தேங்கு நீர்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப்
பாங்கி லாத்தொண்ட னேன்மறந் துய்வனே.

திருவண்ணாமலை திருக்குறுந்தொகை

வட்ட னைம்மதி சூடியை வானவர்
சிட்டனைத் திரு வண்ணா மலையனை
இட்ட னையிகழ்ந் தார்புர மூன்றையும்
அட்ட னையடி யேன்மறந் துய்வனே.

அரக்க னையல றவ்விர லூன்றிய
திருத்த னைத்திரு வண்ணா மலையனை
இரக்க மாயென் உடலுறு நோய்களைத்
துரக்க னைத்தொண்ட னேன்மறந் துய்வனே.

திருமறைக்காடு . அற்புத பதிகம் திருக்குறுந்தொகை

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னூர்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

அரக்கனை விரலா லடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலி ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே.

திருஇன்னம்பர் திருச்சிற்றம்பலம் திருக்குறுந்தொகை

என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே.

சனியும் வெள்ளியுந் திங்களும் ஞாயிறும்
முனிவ னய்முடி பத்துடை யான்றனைக்
கனிய வூன்றிய காரண மென்கொலோ
இனிய னய்நின்ற இன்னம்ப ரீசனே.

திருவொற்றியூர் திருக்குறுந்தொகை

ஒற்றி யூரு மொளிமதி பாம்பினை
ஒற்றி யூருமப் பாம்பும் அதனையே
ஒற்றியூர வொருசடை வைத்தவன்
ஒற்றி யூர்தொழ நம்வினை யோயுமே.

வரையினு லுயர் தோளுடை மன்னனை
வரையி னூர்வலி செற்றவர் வாழ்விடம்
திரையி னூர்புடை சூழ்திரு வொற்றியூர்
உரையி னுற்பொலிந் தாருயர்ந் தார்களே.

திருநல்லம் திருக்குறுந்தொகை

கொல்லத் தான்நம னூர்தமர் வந்தக்கால்
இல்லத் தார்செய லாவதெ னேழைகாள்
நல்லத் தான்நமை யாளுடை யான்கழல்
சொல்லத் தான்வல்லி ரேல்துயர் தீருமே.

மல்லை மல்கிய தோளரக் கன்வலி
ஒல்லை யில்லொழித் தானுறை யும்பதி
நல்ல நல்ல மெனும்பெயர் நாவினால்
சொல்ல வல்லவர் தூநெறி சேர்வரே.

திருவேகம்பம் திருக்குறுந்தொகை

பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டுங் கண்டுங் களித்திகாண் நெஞ்சமே
வண்டு லாமலர்ச் செஞ்சடை யேகம்பன்
தொண்ட னாய்த்திரி யாய்துயர் தீரவே.

பண்ணி லோசை பழத்தினி லின்சுவை
பெண்ணொ டாணென்று பேசற் கரியவன்
வண்ண மில்லி வடிவுவே றாயவன்
கண்ணி லுன்மணி கச்சியே கம்பனே.

இலங்கை வேந்த னிராவணன் சென்றுதன்
விலங்க லையெடுக் கவ்விர லூன்றலும்
கலங்கிக் கச்சியே கம்பவோ வென்றலும்
நலங்கொள் செலவளித் தானெங்கள் நாதனே.

திருவான்மியூர் திருக்குறுந்தொகை

விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்ட நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூ ரீசனே.

பார மாக மலையெடுத் தான்றனைச்
சீர மாகத் திருவிர லூன்றினான்
ஆர்வ மாக அழைத்தவ னேத்தலும்
வார மாயினன் வான்மியூ ரீசனே.

பொது　　அற்புத பதிகம்　　திருக்குறுந்தொகை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.

ஆதிபுராணம்　　திருக்குறுந்தொகை

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயக னாதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே.

நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவன் ஈச னொருவனே.

அரக்கன் வல்லரட் டாங்கொழித் தாரருள்
பெருக்கச் செய்த பிரான்பெருந் தன்மையை
அருத்தி செய்தறி யப்பெறு கின்றிலர்
கருத்தி லாக்கய வக்கணத் தோர்களே.

திருக்குடமூக்கு திருக்குறுந்தொகை

பூவணத்தவன் புண்ணிய னண்ணியங்
காவ ணத்துடை யானடி யார்களைத்
தீவ ணத்திரு நீறுமெய் பூசியோர்
கோவ ணத்துடை யான்குட மூக்கிலே.

காமி யஞ்செய்து காலங் கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ
சாமி யோடு சரச்சு வதியவள்
கோமி யும்முறை யுங்குட மூக்கிலே.

அன்று தானரக் கன்கயி லாயத்தைச்
சென்று தானெடுக் கவுமை யஞ்சலும்
நன்று தான்நக்கு நல்விர லூன்றிப்பின்
கொன்று கீதங்கேட் டான்குட மூக்கிலே.

திருவானைக்கா திருக்குறுந்தொகை

கோனைக் காவிக் குளிர்ந்த மனத்தராய்த்
தேனைக் காவியுண் ணார்சில தெண்ணர்கள்
ஆனைக் காவிலெம் மானை யணைகிலார்
ஊனைக் காவி யுழிதர்வ ருமரே.

நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்
தடையொன் றின்றியே தன்னடைந் தார்க்கெலாம்
அடைய நின்றிடும் ஆனைக்கா வண்ணலே.

ஓத மாகடல் சூழிலங் கைக்கிறை
கீதங் கின்னரம் பாடக் கெழுவினன்
பாதம் வாங்கிப் பரிந்தருள் செய்தங்கோர்
ஆதி யாயிடும் ஆனைக்கா வண்ணலே.

திருமயிலாடுதுறை. திருக்குறுந்தொகை

கொள்ளும் காதன்மை பெய்துறுங் கோல்வளை
உள்ள முள்கி யுரைக்குந் திருப்பெயர்
வள்ளல் மாமயி லாடு துறையுறை
வெள்ளந் தாங்கு சடையனை வேண்டியே.

கோலும் புல்லு மொருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீல மாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே.

பருத்த தோளும் முடியும் பொடிபட
இருத்தி னானவ வின்னிசை கேட்டலும்
வரத்தி னான்மயி லாடு துறைதொழும்
கரத்தி னார்வினைக் கட்டறுங் காண்மினே.

திருவேட்களம் திருக்குறுந்தொகை

நன்று நாடொறும் நம்வினை போயறும்
என்று மின்பம் தழைக்க விருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே.

சேட னுருறை யுஞ்செழு மாமலை
ஓடி ஆங்கெடுத் தான்முடி பத்திற
வாட வூன்றி மலரடி வாங்கிய
வேட னுருறை வேட்களஞ் சேர்மினே.

திருநிலக்குடி திருக்குறுந்தொகை

வைத்த மாடும் மனைவியும் மக்கள்நீர்
செத்த போது செறியார் பிறிவதே
நித்த நிலக் குடியர னைந்நினை
சித்த மாகிற் சிவகதி சேர்திரே.

கல்வி ஞேடெனைப் பூட்டி யமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினல்
நெல்லு நீள்வயல் நிலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேனன்றே.

தருக்கி வெற்பது தாங்கிய வீங்குதோள்
அரக்க னுருட லாங்கொர் விரலினல்
நெரித்து நிலக் குடியரன் பின்னையும்
இரக்க மாயருள் செய்தன னென்பரே.

தனிக்குறுந்தொகை

மலையேவந்து விழினு மனிதர்காள்
நிலையினின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவ னுகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே.

கற்றுக்கொள்வன வாயுள நாவுள
இட்டுக்கொள்வன பூவுள நீருள
கற்றைச்செஞ்சடை யானுள னுமுளோம்
எற்றுக்கோ நமனுல்முனி வுண்பதே.

மனிதர்கா ளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந்தாற் கனியுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீசனெனுங்கனி
இனிது சாலவும் ஏசற்றவர்கட்கே.

இரத்தினகிரி—வாட்போக்கி

காலபாசம் பிடித்தெழு தூதுவர்
பாலகர் விருத்தர் பழையாரெனுர்
ஆலநீழ லமர்ந்த வாட்போக்கியார்
சீலமார்ந்தவர் செம்மையு ணிற்பரே.

இரக்கமுன் னறியா தெழுதூதுவர்
பரக்கழித்தவர் பற்றுதல் முன்னமே
அரக்கனுக்கருள் செய்தவாட் போக்கியார்
கரப்பதுங் கரப்பா ரவர் தங்கட்கே.

திருச்சிற்றம்பலம்.

ஆறாந் திருமுறை—திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

அரியானை அந்தணர்தம் சிந்தையானை அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும், தெரியாத தத்துவனைத் தேனைப்பாலைத் திகழொளியைத் தேவர்கள்தங்கோனை மற்றைக், கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக் கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற, பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தை அகல்ஞாலத் தகத்துள் தோன்றி, வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும்விட்டு வான்புலன்கள் அகத்தடக்கி மடவாரோடும், பொருந்தணைமேல் வரும்பயனைப் போகமாற்றிப் பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க்கென்றும், பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான் வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர், இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின்மேலான் ஏழண்டத் தப்பாலான் இப்பாற்செம்பொன், புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான் பொறுப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான், கனத்தகத்தான் கயிலாயத்துச்சியுள்ளான் காளத்தியா னவனென் கண்ணுளானே.

நினைந்துருகும் அடியாரை நையவைத்தார் நில்லாமே தீவினைகள் நீங்கவைத்தார், சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார் செழுமதியின் தளிர் வைத்தார் சிறந்து வானோர், இனந் துருவி மணிமகுடத் தேறத்துற்ற இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி, நனைந்தனைய திருவடியென் தலைமேல்வைத்தார் நல்லூரெம் பெருமானார் நல்லவாறே.

பச்சை நிறமுடையர் பாலர் சாலப் பழையர் பிழையெலாம் நீக்கி யாள்வர், கச்சைக் கதநாகம் பூண்ட தோளர் கலனொன்று கையேந்தி யில்லந்தோறும், பிச்சைகொள நுகர்வர் பெரியர் சாலப் பிறங்கு சடைமுடியர் பேணுந் தொண்டர், இச்சை மிகஅறிவர் என்றுமுள்ளார் இடைமருது மேவி யிடங் கொண்டாரே.

படைமலிந்த மழுவாளும் மானுந்தோன்றும் பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளைதோன்றும், நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும் நான்மறையி னொலிதோன்றும் நயனந் தோன்றும், உடைமலிந்த கோவணமுங் கீளுந் தோன்றும் மூரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும், புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும் பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே.

உரித்தானை மதவேழந்தன்னை மின்னாரொளி முடியெம்பெருமானை உமையோர்பாகந், தரித்தானைத் தரியலர்தம் புரமெய்தானைத் தன்னடைந்தார் தம்வினைபோய் பாவமெல்லாம், அரித்தானை ஆலதன்கீழ் இருந்து நால்வர்க் கறம்பொருள்வீடின்பமாறங்கம் வேதந், தெரித்தானைத் திருநாகேச் சரத்துளானைச் சேராதார் நன்னெறிக்கண் சேராதாரே.

வாயானை மனத்தானை மனத்துள்நின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான்தன்னைத், தூயானைத் தூவெள்ளை யேற்றான்தன்னைச் சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றஎன், தாயானைத் தவமாய தன்மையானைத் தலையாய தேவாதி தேவர்க்கென்றும், சேயானைத் தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேனானே.

தூண்டு சுடரனைய சோதிகண்டாய் தொல்லமரர் சூளாமணி தான்கண்டாய், காண்டற்கரிய கடவுள் கண்டாய் கருதுவார்க் காற்ற வெளியான்கண்டாய், வேண்டுவார் வேண்டுவதே யீவான்கண்டாய் மெய்ந்நெறிகண்டாய் விரதமெல்லாம், மாண்டமனத்தார் மனத்தான்கண்டாய் மறைக்காட்டுறையும் மணாளன்தானே.

கள்ளி முதுகாட்டி லாடிகண்டாய் காலனையும் காலாற் கடந் தான்கண்டாய், புள்ளி யுழைமானின் தோலான்கண்டாய் புலியுரிசே ராடைப் புனிதன்கண்டாய், வெள்ளிமிளிர் பிறை முடிமேற் சூடிகண்டாய் வெண்ணீற்றுன் கண்டாய் நஞ்செந் தின்மேய, வள்ளி மணாளற்குத் தாதைகண்டாய் மறைக்காட் டுறையும் மணாளன்தானே.

கருவாகிக் குழம்பிருந்து கலித்துமூளை கருநரம்பும் வெள் ளெலும்புஞ் சேர்ந்தொன்ருகி, உருவாகிப் புறப்பட்டிங் கொருத்திதன்னுல் வளர்க்கப்பட்டுயிராருங் கடைபோகாரால், மருவாகி நின்னடியே மறவே னம்மான் மறித்தொருகாற் பிறப் புண்டேல் மறவாவண்ணம், திருவாரூர் மணவாளா திருத் தெங்கூராய் செம்பொனே கம்பனே திகைக்திட்டேனே.

புண்ணியமு நன்னெறியு மாவதெல்லா நெஞ்சமே யிதுகண் டாய் பொருந்தக்கேணீ, நுண்ணியவெண் ணூல்கிடந்த மார் பாவென்று நுந்தாத வொண்சுடரே யென்றுநாளும், விண் ணியங்கு தேவர்களும் வேதநான்கும் விரைமலர்மே னன் முகனு மாலுங்கூடி, எண்ணரிய திருநாமமுடையாயென்றும் எழிலாரூராவென்றே யேத்தா நில்லே.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா நித்தலுமெம் பிரானுடைய கோயில்புக்குப், புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித், தலை யாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா சயபோற்றி போற்றி யென்றும், அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதியென்றும் ஆரூரா என்றென்றே அலருநில்லே.

எல்லா வுலகமு மானுய் நீயே யேகம்பம்மேவி யிருந்தாய் நீயே, நல்லாரை நன்மை யறிவாய் நீயே ஞானச்சுடர்விளக் காய் நின்ருய்நீயே, பொல்லாவினைக ளறுப்பாய் நீயே புகழ்ச் சேவடி யென்மேல் வைத்தாய் நீயே, செல்வாய செல்வந் தரு வாய் நீயே திருவையாறகலாத செம்பொற் சோதீ.

வண்டோங்கு செங்கமலக் கழுநீர்மல்கும் மதமத்தஞ் சேர் சடைமேல் மதியஞ் சூடித், திண்டோள்க ளாயிரமும் வீசி நின்று திசைசேர நடமாடிச் சிவலோகனுர், உண்டார் நஞ் சுலகுக்கோ ருறுதிவேண்டி ஒற்றியூர்மேய வொளிவண்ண னுர், கண்டேன்நான் கனவகத்திற் கண்டேற்கென்றன் கடும் பிணியுஞ் சுடுந்தொழிலுங் கைவிட்டவே.

திருவேயென் செல்வமே தேனே வானோர் செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற் சோதிமிக்க, உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்உள்ளமே உள்ளத்தினுள்ளே நின்ற, கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்கருமணியே மணியாடுபாவாய் காவாய், அருவாய வல்வினைநோய் அடையாவண்ணம் ஆவடு தண் டுறையுறையும் அமரரேறே.

சமரம்மிகு சலந்தரன்போர் வேண்டினனைச் சக்கரத்தாற் பிளப்பித்த சதுரர்போலும், நமனையொரு கால்குறைத்த நாதர் போலும் நாரணனை யிடப்பாகத் தடைத்தார்போலும், குமரனை யும் மகனாக வுடையார்போலுங் குளிர்வீழி மிழலையமர் குழகர் போலும், அமரர்கள் பின் அமுதுணநஞ் சுண்டார்போலும் அடியேனை ஆளுடைய அடிகள்தாமே.

பேராயிரம்பரவி வானோரேத்தும் பெம்மானைப் பிரிவிலா அடியார்க்கென்றும், வாராதசெல்வம் வருவிப்பானை மந்திரமுந் தந்திரமும் மருந்துமாகித், தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத் திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட, போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.

எவரேனுந் தாமாக இலாடத்திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி, உவராதே யவரவரைக் கண்டபோது உகந் தடிமைத் திறநினைந்தங் குவந்துநோக்கி, யிவர்தேவ ரவர் தேவரென்றுசொல்லி யிரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக், கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றுப் பூர் நடுதறியைக் காணலாமே.

ஐயினால் மிடறடைப்புண்டு ஆக்கைவிட்டு ஆவியார் போவ துமே அகத்தார்கூடி, மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி மயானத்தி லிடுவதன்முன் மதியஞ்சூடும், ஐயனார்க் காளாகி அன்புமிக்கு அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதங், கையினால் தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றுப்பூர் நடுதறி யைக் காணலாமே.

எத்தாய ரெத்தந்தை யெச்சுற்றத்தார் எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார், செத்தால்வந் துதவுவா ரொருவ ரில்லை சிறுவிற கால் தீமூட்டிச் செல்லா நிற்பர், சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித் திருவானைக் காவுடைய செல்வா என்றன், அத்தா வுன் பொற்பாதம் அடையப் பெற்றால் அல்லகண்டங் கொண் டடியேன் என்செய்கேனே.

முந்தைகாண் மூவரினும் முதலானான்காண் மூவிலைவேல் மூர்த்திகாண் முருகவேட்குத், தந்தைகாண் தண்கடமா முகத் தினாற்குத் தாதைகாண் தாழ்ந்தடியே வணங்குவார்க்குச், சிந் தைகாண் சிந்தாத சித்தத்தார்க்குச் சிவனவன்காண் செங் கண்மால் விடையொன் றேறும், எந்தைகாண் எழிலாரும் பொழிலார்கச்சி ஏகம்பன்காண் அவனென் எண்ணத்தானே.

ஆராத இன்னமுதை அம்மான்தன்னை அயனொடுமா லறி யாத ஆதியானைத், தாராரும் மலர்க்கொன்றைச் சடையான் தன்னைச் சங்கரனைத் தன்னொப்பா ரில்லாதானை, நீரானைக் காற்றானைத் தீயானை நீள்விசும்பாய் ஆழ்கடல்க ளேழுஞ் சூழ்ந்த, பாரானைப் பள்ளியின் முக்கூடலானைப் பயிலாதே பாழேநான் உழன்றவாறே.

மின்காட்டுங் கொடிமருங்கு லுமையாட்கென்றும் விருப் பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கையோன்காண், நன்பாட் டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக்கிழி தருமிக் கருளினோன் காண், பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கேநின்ற புனக் காந்தள் கைகாட்டக்கண்டு வண்டு, தென்காட்டுஞ் செழும் புறவில் திருப்புத்தூரில் திருத்தளியான்காண் அவனென் சிந்தையானே.

பாடவடியார் பரவக்கண்டேன் பத்தர் கணங்கண்டேன் மொய்த்த பூதம், ஆடல்முழவம் அதிரக்கண்டேன் அங்கை அனல் கண்டேன் கங்கையாளைக், கோடலரவார் சடையிற் கண்டேன் கொக்கினிதழ்கண்டேன் கொன்றைகண்டேன், வாடல் தலையொன்று கையிற்கண்டேன் வாய்மூரடிகளை நான் கண்டவாறே.

ஒன்றா வுலகனைத்து மானார்தாமே ஊழிதோறூழி உயர்ந்தார் தாமே, நின்றாகி யெங்கும் நிமிர்ந்தார்தாமே நீர்வளிதீ யாகாச மானார்தாமே, கொன்றாடுங் கூற்றை யுதைத்தார்தாமே கோலப்பழனை உடையார்தாமே, சென்றாடு தீர்த்தங்க ளானார் தாமே திருவாலங் காடுறையுஞ் செல்வர்தாமே.

வானவன்காண் வானவர்க்கும் மேலானான்காண் வட மொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும், ஆனவன்காண் ஆனைந்தும் ஆடினான்காண் ஐயன்காண் கையி லனலேந்தி யாடும், கானவன்காண் கானவனுக் கருள்செய்தான்காண் கருதுவா ரிதயத்துக் கமலத்தூறும், தேனவன்காண் சென்ற டையாச் செல்வன்றான்காண் சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன்தானே.

மூவிலைவேற் கையானை மூர்த்திதன்னை முதுபிணக்காடுடையானை முதலானானை, ஆவினில்ஐந் துகந்தானை அமரர்கோனை ஆலால முண்டுகந்த ஐயன்தன்னைப், பூவினின்மேல் நான்முகனும் மாலும்போற்றப் புணர்வரிய பெருமானைப் புனிதன் தன்னைக், காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான்தன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனா யெறியுங் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமா யட்ட மூர்த்தியாகிப், பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும் பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி, நெருநலையாய் இன்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே.

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ அன்புடைய மாமனும் மாமியும்நீ, ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ ஒருகுலமுஞ் சுற்றமும் ஓரூரும்நீ, துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய்நீ துணையா யென்நெஞ்சந் துறப்பிப்பாய்நீ, இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ யிறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி நலஞ்சுடரே நால்வேதத் தப்பால்நின்ற, சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற சொலற்கரிய சூழலாய் இதுவுன்தன்மை, நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந்தன்னுள் நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற, கற்பகமே யானுன்னை விடுவேனல்லேன் கனகமா மணிநிறத்தெங் கடவுளானே.

திருக்கோயி லில்லாத திருவிலூரும் திருவெண்ணீ றணியாத திருவிலூரும், பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும் பாங்கினொடு பலதளிக ளில்லாவூரும், விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும் விதானமும் வெண்கொடியு மில்லாவூரும், அருப்போடு மலர்பறித்திட் டுண்ணாவூரும் அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே.

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பாராகில் தீவண்ணர் திறமொருகால் பேசாராகில், ஒருகாலுந் திருக்கோயில் சூழாராகில் உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில், அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகில் அளியற்றார் பிறந்தவாறேதோவென்னிற், பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே.

நின்னுவார் பிறரன்றி நீயேயானுய் நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்துமானுய், மன்னுனுய் மன்னவர்க்கோரமுதமானுய் மறைநான்குமானுய் ஆறங்கமானுய், பொன்னுனுய் மணியானுய் போகமானுய் பூமிமேல் புகழ்தக்க பொருளேயுன்னை, என்னுனுய் என்னுனுய் என்னி னல்லால் ஏழையேன் என்சொல்லி யேத்துகேனே.

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லேன் குற்றமே பெரிதுடையேன் கோலமாய, நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானியல்லேன் நல்லாரோ டிசைந்திலேன் நடுவேநின்ற, விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன் வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேசவல்லேன், இலம் பொல்லேன் இரப்பதே ஈயமாட்டேன் என்செய்வான் தோன்றினேன் ஏழையேனே.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடு வானுளத் தருவரேனும், மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம் மாதேவர்க் கேகாந்த ரல்லாராகில், அங்கமெலாங் குறைந் தழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும், கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.

நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம், ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம் இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை, தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரன்நற் சங்க வெண் குழையோர்காதிற், கோமாற்கே நாமென்று மீளா ஆளாய்க் கொய்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

முத்திப் பதிகம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனே எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால், கண்ணிலேன் மற்றோர் களை கண் இல்லேன் கழலடியே கைதொழுது காணின்அல்லால், ஒண்ணுளே ஒன்பது வாசல்வைத்தாய் ஒக்க அடைக்கும் போது உணரமாட்டேன், புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாந் திருவடிமேல் அலரிட்டு தேடிநின்று, நாவார்ந்த மறைபாடி நட்டம்ஆடி நான்முகனும் இந்திரனும் மாலும்போற்றக், காவார்ந்த பொழிற் சோலை கானப்பேராய் கழுக்குன்றத் துச்சியாய் கடவுளேநின், பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம் உணர்ச்சித் தடுமாற் றத்துள்ளே நின்ற, இருவரையும் மூவரையும் என்மேல்ஏவி இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக், கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன் கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற, பொருவரையாய் உன்னடிக்கே போதுகின்றேன் பூம் புகலூர் மேவிய புண்ணியனே.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

ஏழாந் திருமுறை.

திருவெண்ணெய்நல்லூர் அற்புத பதிகம் பண்-இந்தளம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே. [டுறையுள்

நாயேன்பல நாளுநினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
ஆயாவுனக் காளாயினி யல்லேனென லாமே. [டுறையுள்

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறை
ஆரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே. [யுள்

திருஓணகாந்தன்றளி அற்புத பதிகம் பண்-இந்தளம்

நெய்யும்பாலுந் தயிருங்கொண்டு நித்தம்பூசனை செய்யலுற்றார்
கையிலொன்றுங் காணமில்லைக் கழலடிதொழு துய்யினல்லால்
ஐவர்கொண்டிங் காட்டவாடி யாழ்குழிப்பட் டழுந்துவேனுக்கு
உய்யுமாறென் றருளிச்செய்யீ ரோணகாந்தன் றளியுளீரே.

திங்கள்தங்கு சடையின்மேலோர் திரைகள்வந்து புரளவீசும்
கங்கையாளேல் வாய்திறவாள் கணபதியேல் வயிறுதாரி
அங்கைவேலோன் குமரன்பிள்ளை தேவியார்கோற் றட்டியாளர்
உங்களுக்காட் செய்யமாட்டோ மோணகாந்தன் றளியுளீரே.

ஓவணமே லெருதொன்றேறு மோணகாந்தன் றளியுளார்தாம் ஆவணம்செய் தாளுங்கொண்டு வரைதுகிலொடு பட்டுவீக்கிக் கோவணமேற் கொண்டவேடங் கோவையாக வாரூரன் சொன்ன, பாவணத்தமிழ் பத்தும்வல்லார் பறையுந்தாஞ் செய்த பாவந்தானே.

திருஎதிர்கொள்பாடி பண்-இந்தளம்

மத்த யானை யேறி மன்னர் சூழவரு வீர்காள்
செத்த போதி லாரு மில்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்த வுள்ளம் மாற்ற வேண்டா வம்மின் மனத்தீரே
அத்தர் கோயி லெதிர்கொள்பாடி யென்பதடை வோமே.

தோற்ற முண்டேல் மரண முண்டு துயரமனை வாழ்க்கை
மாற்ற முண்டேல் வஞ்சமுண்டு நெஞ்ச மனத்தீரே
நீற்ற ரேற்றர் நீல கண்டர் நிறை புனல்நீள் சடைமேல்
ஏற்றர் கோயி லெதிர்கொள் பாடி யென்பதடை வோமே.

முத்து நீற்றுப் பவள மேனிச் செஞ்சடையா னுறையும்
பத்தர் பந்தத் தெதிர்கொள் பாடிப் பரமனையே பணியச்
சித்தம் வைத்த தொண்டர் தொண்டன் சடையனவன் சிறு
பத்த னூரன் பாடல் வல்லார் பாதம்பணி வாரே. [வன்

திருக்கலயநல்லூர் பண்-தக்கராகம்

குரும்பைமுலை மலர்க் குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினைநன் கறிந்து
விரும்புவரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்க ணடமாடு மணிபொழில்சூ ழயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கண் முகமலருங் கலய நல்லூர் காணே.

மாலயனுங் காண்பரிய மாலெரியாய் நிமிர்ந்தோன்
வன்னிமதி சென்னிமிசை வைத்தவன்மொய்த் தெழுந்த
வேலைவிட முண்டமணி கண்டன்விடை யூரும்
விமலனுமை யவளோடு மேவியவூர் வினவில்
சோலைமலி குயில்கூவக் கோலமயி லாலச்
சுரும்பொடுவண் டிசைமுரலப் பசுங்கிளிசொற் றுதிக்கக்
காலையிலு மாலையிலுங் கடவுளடி பணிந்து
கசிந்தமனத் தவர்பயிலுங் கலயநல்லூர் காணே.

தண்புனலும் வெண்மதியுந் தாங்கியசெஞ் சடையன்
தாமரையோன் தலைகலனுக் காமரமுன் பாடி
உண்பலிகொண் டுழல்பரம னுரையுமூர் நிறைநீர்
ஒழுகுபுன லரிசிலின்றென் கலயநல்லூ ரதனை
நண்புடைய நன்சடைய னிசைஞானி சிறுவன்
நாவலர்கோ னூரனுரை யினைநந் துரைசெய்
பண்பயிலும் பத்துமிவை பத்திசெய்து நித்தம்
பாடவல்லா ரல்லலொடு பாவமிலர் தாமே.

திருக்கோளிலி அற்புத பதிகம் பண்-நட்டராகம்

நீள நினைந்தடியே னுமைநித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்வாடி வருந்தாமே [பெற்றேன்
கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்
ஆளிலை யெம்பெருமா னவையட்டித் தரப்பணியே.

கொல்லை வளம்புறவிற் றிருக்கோளிலி மேயவனை
நல்லவர் தாம்பரவுந் திருநாவல வூரனவன்
நெல்லிட வாட்கள் வேண்டி நினைந்தேத்திய பத்தும்வல்லார்
அல்லல் களைந்துலகில் அண்டர் வானுல காள்பவரே.

திருமழபாடி பண்-நட்டராகம்

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுண் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

கீளார் கோவணமுந் திருநீறுமெய்ப் பூசியுன்றன்
தாளே வந்தடைந்தேன் தலைவாவெனை யேன்று கொள்நீ
வாளார் கண்ணிபங்கா மழபாடியுள் மாணிக்கமே
ஆளாய் நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

ஏரார் முப்புரமும் எரியச் சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழபாடியுண் மேயவனை
சீரார் நாவலர்கோ னூரனுரைத்ததமிழ்
பாரோ ரேத்தவல்லார் பரலோகத் திருப்பாரே.

திருக்காளத்தி பண்-நட்டராகம்

செண்டா டும்விடையாய் சிவனேயென் செழுஞ்சுடரே
வண்டா ருங்குழலா ளுமைபாக மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்குங் கணநாதனெங் காளத்தியாய்
அண்டா வுன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே.

காரா ரும்பொழில்சூழ் கணநாதனெங் காளத்தியுள்
ஆரா வின்னமுதை யணிநாவலா ரூரன் சொன்ன
சீரூர் செந்தமிழ்கள் செப்புவார்வினை யாயினபோய்ப்
பேரா விண்ணுலகம் பெறுவார்பிழைப் பொன்றிலரே.

திருக்குருகாவூர் அற்புத பதிகம் பண்-நட்டராகம்

இத்தனை யாமாற்றை யறிந்திலே னெம்பெருமான்
பித்தரே யென்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்க முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக வுண்பலிக் குழல்வானே
காடுநல் லிடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

வளங்கனி பொழின்மல்கு வயலணிந் தழகாய
விளங்கொளி குருகாவூர் வெள்ளடை யுறைவானை
இளங்கிளை யாரூரன் வனப்பகை யவளப்பன்
உளங்குளிர் தமிழ்மாலை பத்தர்கட் குரையாமே.

திருக்கேதாரம் பண்-நட்டபாடை

வாழ்வாவது மாயம் இதுமண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின் றடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக் கேதாரமெனீரே.

நாவின்மிசை யரையன்னொடு தமிழ்ஞான சம்பந்தன்
யாவர்சிவ னடியார்களுக் கடியா னடித்தொண்டன்
தேவன்றிருக் கேதாரத்தை யூரன் னுரைசெய்த
பாவின்றமிழ் வல்லார்பர லோகத்திருப் பாரே.

நமக்கடிகளாகிய அடிகள் பண்-கொல்லி

பாறுதாங்கிய காடரோ படுதலையரோ மலைப்பாவையோர்
கூறுதாங்கிய குழகரோ குழைக்காதரோ குறுங்கோட்டிள
ஏறுதாங்கிய கொடியரோ சுடுபொடியரோ விளங்கும்பிறை
ஆறுதாங்கிய சடையரோ நமக்கடிகளாகிய வடிகளே.

படிசெய்நீர்மையிற் பத்தர்காள்பணிந்தேத்தினேன் பணியிரருள்
வடிவிலான்திரு நாவலூரன் வனப்பகையப்பன் வன்றொண்டன்
செடியனாகிலுந் தீயனாகிலுந் தம்மையேமனஞ் சிந்திக்கும்
அடியனூரனை யாள்வரோ நமக்கடிகளாகிய வடிகளே.

திருப்புகலூர் அற்புத பதிகம் பண்-கொல்லி

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ் சார்வினுந்தொண்டர் தருகிலாப், பொய்மையாளரைப் பாடாதேயெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள், இம்மையேதருஞ் சோறுங்கூறையு மேத்தலாமிடர் கெடலுமாம், அம்மையே சிவலோகமாள்வதற் கியாதுமையுற வில்லையே.

மிடுக்கிலாதானை வீமனே விறல்விசயனே வில்லுக்கிவ னென்று, கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங் கொடுப்பாரிலை, பொடிக்கொள் மேனியெம் புண்ணியன்எந்தை புகலூர்பாடுமின் புலவீர்காள், அடுக்குமே லமருலகமாள்வதற் கியாதுமையுற வில்லையே.

செறுவினிற்செழுங் கமலமோங்குதென் புகலூர் மேவிய செல்வனை, நரவம்பூம்பொழில் நாவலூரன் வனப்பகையப்பன் சடையன்றன், சிறுவன் வன்றொண்ட னூரன்பாடிய பாடல் பத்திவை வல்லவர், அறவனுரடி சென்றுசேர்வதற் கியாது மையுறவில்லையே.

திருவதிகை அற்புத பதிகம் பண்-கொல்லிக்கௌவாணம்

தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவி னுரியானைக் கரிகாட்டி லாட
லுடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்
தெம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல்வைத்திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே.

என்பினையே கலனாக அணிந்தானை யெங்கள்
எருதேறும் பெருமானை யிசைஞானி சிறுவன்
வன்பனைய வளர்பொழில்சூழ் வயனாவ லூர்க்கோன்
வன்றொண்ட னாரூரன் மதியாதுசொன்ன
அன்பனை யாவர்க்கு மறிவரிய வத்தர்
பெருமானை யதிகைமா நகருள் வாழ்பவனை
என்பொன்னை யெறிகெடில வடவிரட்டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே

திருத்தொண்டத்தொகை பண்-கொல்லிக்கௌவாணம்
அற்புத பதிகம்

தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனூர்க் கடியேன்
இல்லையேயென்னாத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கடி-
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன் [யேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே.

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே.

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனா மரனடியே யடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பார்
ஆரூரி லம்மானுக் கன்பரா வாரே.

திருக்கச்சூர் அற்புத பதிகம் பண்-கொல்லிக்கௌவாணம்

முதுவாயோரி கதற முதுகாட் டெரிகொண்டாடல் முயல்வானே, மதுவார்கொன்றைப் புதுவீசூடும் மலையான்மகள்தன் மணவாளா, கதுவாய்த் தலையிற் பலிநீகொள்ளக்கண்டா லடியார் கவலாரே, அதுவேயாமா றிதுவோகச்சூ ராலக் கோயி லம்மானே.

அன்னமன்னும் வயல்சூழ்கச்சூ ராலக்கோயி லம்மானை, உன்னமுன்னு மனத்தாரூர னாரூரன்பேர் முடிவைத்த, மன்னு புலவன் வயல்நாவலர்கோன் செஞ்சொல்நாவன் வன்றொண் டன், பன்னு தமிழ்நூல் மாலைவல்லா ரவரெந்தலைமேற் பயில் வாரே.

பாண்டிக்கொடுமுடி பண்-பழம்பஞ்சுரம்

மற்றுப்பற்றெனக் கின்றிநின்திருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனிவிப்பிற வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.

ஓவுநாளுணர் வழியுநாளுயிர் போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலாற்கரு தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ் சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.

கோணியபிறை சூடியைக்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி,
பேணியபெரு மானைபிஞ்ஞகப் பித்தனைப்பிறப் பில்லியைப்,
பாணுலாவரி வண்டறைகொன்றைத் தாரனைப்படப் பாம்பரை,
நாணனைத் தொண்ட னூரன்சொல்லிவை சொல்லுவார்க்
கில்லை துன்பமே.

திருமுருகன்பூண்டி அற்புத பதிகம் பண்-பழம்பஞ்சுரம்

கொடுகுவெஞ்சிலை வடுகவேடுவர் விரவலாமை சொல்லித்
திடுகுமொட்டெனக் குத்திக்கூறைகொண் டாறலைக்குமிடம்
முடுகுநாறிய வடுகர்வாழ்முரு கன்பூண்டிமா நகர்வாய் [பிரானீரே
இடுகுநுண்ணிடை மங்கைதன்னொடும் எத்துக்கிங்கிருந்தீரெம்

முந்திவானவர் தாந்தொழுமுரு கன்பூண்டிமா நகர்வாய்ப்
பந்தணைவிரற் பாவைதன்னையோர் பாகம்வைத்தவனைச்
சிந்தையிற்சிவ தொண்டனூர னுரைத்தன பத்துங்கொண்டு
எந்தம்மடிகளை யேத்துவாரிட ரொன்றுந் தாமிலரே.

திருவாலங்காடு பண்-பழம்பஞ்சுரம்

முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையா ளுமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழையனூர்மேய
அத்தா ஆலங் காடாவுன் னடியார்க் கடியே னாவேனே.

பத்தர் சித்தர் பலரேத்தும் பரமன் பழைய னூர்மேய
அத்தன் ஆலங் காடன்ற னடிமைத் திறமே யன்பாகிச்
சித்தர் சித்தம் வைத்தபுகழ்ச் சிறுவ னூர னொண்டமிழ்கள்
பத்தும்பாடி யாடுவார் பரமனடியே பணிவாரே.

திருவொற்றியூர் அற்புத பதிகம் தக்கேசி

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன் அதுவு நான் படப் பாலதொன்ருனல், பிழுக்கை வாரியும் பால்கொள்வரடி கேள் பிழைப்பனுகிலுந் திருவடிப்பிழையேன், வழுக்கிவீழினுந் திருப்பெயரல்லால் மற்றுநான் அறியேன் மறுமாற்றம், ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய் ஒற்றியூரெனு மூருறை வானே.

திருக்கழுமலம் தக்கேசி

மற்ருெரு துணை இனி மறுமைக்குங்காணேன் வருந்தலுற்றேன் மறவா வரம்பெற்றேன், சுற்றியசுற்றமுந் துணையென்று கருதேன் துணையென்று நான் தொழப்பட்ட ஒண்சுடரை, முத்தியும் ஞானமும் வானவர் அறியா முறைமுறை பலபல நெறிகளுங்காட்டி, கற்பனை கற்பித்த கடவுளை அடியேன் கழுமல வளநகர் கண்டுகொண்டேனே.

திருக்கோலக்கா தக்கேசி

நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன், தாளம் ஈந்தவன் பாடலுக்கிரங்கும் தன்மையாளனை என்மனக்கருத்தை, ஆளும் பூதங்கள் பாடநின்ருடும் அங்கணன்றனை எண்கணம்இறைஞ்சும், கோளிலிப் பெருங் கோயிலுள்ளானைக் கோலக்காவினிற் கண்டுகொண்டேனே.

திருப்புன்கூர் தக்கேசி

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத அவனைக்காப்பது காரணமாக, வந்தகாலன்ற னாருயிரதனை வவ்வினுய்க் குன்றன் வன்மைகண்டடியேன், எந்தை நீயெனை நமன்தமர் நலியிலிவன்மற்றென்னடி யானென விலக்குஞ், சிந்தையால் வந்துன் திருவடியடைந்தேன் · செழும்பொழிற் றிருப்புன்கூருளானே.

நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கரையன் நாளைப்போவானுங், கற்றசூதன் நற்சாக்கியன் சிலந்தி கண்ணப்பன் கணம்புல்ல னென்றிவர்கள், குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங் கொள்கைகண்டுநின் குரைகழ லடைந்தேன், பொற்றிரள்மணிக் கமலங்கள் மலரும் பொய்கைசூழ் திருப்புன்கூருளானே.

திருவாரூர் தக்கேசி

பொன்னு மெய்ப்பொருளுந் தருவானைப் போகமுந் திருவும் புணர்ப்பானைப், பின்னை யென்பிழையைப் பொறுப்பானைப் பிழையெலாந் தவிரப் பணிப்பானை, இன்ன தன்மையனென் றறியொண்ணு எம்மானை யெளிவந்தபிரானை, அன்னம் வைகும் வயற்பழனத் தணியாரூரானை மறக்கலுமாமே.

வடதிருமுல்லைவாயில் தக்கேசி

திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமு மெனக்குன் சீருடைக் கழல்களென் றெண்ணி, ஒருவரை மதியா துருமைகள்செய்து மூடியும் உறைப்பனுய்த் திரிவேன், முருகமர் சோலைசூழ் திரு முல்லை வாயிலாய் வாயினுலுன்னைப், பரவிடு மடியேன் படு துயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே.

சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச் சூழ் கொடி முல்லையாற் கட்டிட்டு, எல்லையி லின்ப மவன்பெற வெளிப்பட்டருளிய இறைவனே யென்றும், நல்லவர் பரவுந் திருமுல்லை வாயில் நா த னே நரைவிடையேறி, பல்கலைப் பொருளே படுதுயர்களையாய் பாசுபதா பரஞ்சுடரே.

திருவேகம்பம் அற்புத பதிகம் தக்கேசி

ஆலந்தானுகந் தமுதுசெய்தானை யாதியை யமரர் தொழு தேத்துஞ், சிலந்தான் பெரிதும் உடையானைச் சிந்திப்பா ரவர் சிந்தையுளானை, ஏலவார் குழ லாளுமை நங்கை யென்று மேத்தி வழிபடப்பெற்ற, காலகாலனைக் கம்பனெம்மானைக் காணக்கண் ணடியேன் பெற்றவாறே.

உற்றவர்க்கு உதவும் பெருமானை ஊர்வதொன்றுடையான் உம்பர்கோனைப், பற்றினுர்க்கென்றும் பற்றவன்றன்னைப் பாவிப்பார்மனம் பாவிக்கொண்டானை, அற்றமில்புகழாள் உமைநங்கை ஆதரித்து வழிபடப்பெற்ற, கற்றைவார்சடைக் கம்பனெம்மானைக் காணக்கண் அடியேன் பெற்றவாரே.

எள்க லின்றி யிமையவர்கோனை ஈசனை வழிபாடுசெய்வாள் போல், உள்ளத் துள்கி யுகந்துமை நங்கை வழிபடச்சென்று நின்றவாகண்டு, வெள்ளங்காட்டி வெருட்டிட வஞ்சி வெருவி யோடித்தழுவ வெளிப்பட்ட, கள்ளக்கம்பனை எங்கள்பிரானைக் காணக்கண் ணடியேன் பெற்றவாறே.

திருவலிவலம் தக்கேசி

நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ்மாலை, சொல்லியவே சொல்லி யேத்துகப்பானைத் தொண்டனே னறியாமை யறிந்து, கல்லியன் மனத்தைக் கசிவித்துக் கழலடி காட்டியென் களைகளை யறுக்கும் வல்லியல் வானவர் வணங்கநின்றானை வலிவலந்தனில் வந்துகண்டேனே.

திருவாவடுதுறை தக்கேசி

வானநாடனே வழித்துணைமருந்தே மாசிலாமணியே மறைப்பொருளே, ஏனமா வெயிருமையு மெலும்பும் ஈடுதாங்கிய மார்புடையானே, தேனெய் பால்தயி ராட்டுகந்தானே தேவனே திருவாவடுதுறையுள், ஆனையே யெனை யஞ்சலென் றருளா யாரெனக்குற வமரர்க ளேறே.

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி சித்திரப் பந்தர் சிக்கன வியற்றச், சுருண்ட செஞ்சடை யாயதுதன்னைச் சோழனுக்கிய தொடர்ச்சிகண் டடியேன், புரண்டு வீழ்ந்து நின் பொன் மலர்ப்பாதம் போற்றி போற்றியென் றன்பொடு புலம்பி, அருண்டென் மேல்வினைக்கு அஞ்சிவந்தடைந்தேன் ஆவடுதுறை யாதியெம்மானே.

திருவையாறு அற்புத பதிகம் பண்-காந்தாரபஞ்சமம்

பரவும் பரிசொன் றறியேனான் பண்டே யும்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலு மெய்த நினைய மாட்டேனான்
கரவி லருவி கமுகுண்ணத் தெங்கங் குலைக்கீழ் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிகோட்டத் தையா றுடைய அடிகளோ.

எங்கே போவே னாயிடினும் அங்கேவந்தென் மனத்திராய்
சங்கை யொன்று மின்றியே தலைநாள்கடைநா ளொக்கவே
கங்கை சடைமேற்கரந்தானே கலைமான்மறியுங் கனன்மழுவும்
தங்குந் திரைக்கா விரிகோட்டத் தையா றுடைய அடிகளோ.

கூடியடியா ரிருந்தாலும் குணமொன் றில்லீர் குறிப்பில்லீர்
ஊடி யிருந்து முணர்கிலே னும்மைத் தொண்ட னூரனேன்
தேடி யெங்குங் காண்கிலேன் திருவா ரூரே சிந்திப்பன்
ஆடுந் திரைக்கா விரிகோட்டத் தையா றுடைய அடிகளோ.

வன்பார்த்தான்பனங்காட்டூர் பண்—சீகாமரம்

விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை
அடையிலன் புடையானை யாவர்க்கு மறியொண்ணா
மடையில் வாளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்
சடையிற்கங்கை தரித்தானைச் சாராதார் சார்வென்னே.

நெற்றிக்கண் ணுடையானை நீறேறுந் திருமேனிக்
குற்றமில் குணத்தானைக் கோணுதார் மனத்தானைப்
பற்றிப்பாம் பரையார்த்த படிறன்றன் பனங்காட்டூர்ப்
பெற்றேன்றேறும் பிரானைப் பேசாதார் பேச்சென்னே.

பாரூரும் பனங்காட்டூர்ப் பவளத்தின் படியானைச்
சீரூருந் திருவாரூர்ச் சிவன்பேர் சென்னியில்வைத்த
ஆரூரன் அடித்தொண்டன் அடியன்சொல் அடிநாய்
ஊரூர னுரைசெய்வா ருயர்வானத் துயர்வாரே. [சொல்

திருக்கழுக்குன்றம் பண்-நட்டபாடை

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றி னேடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே.

பல்லில் வெள்ளைத் தலையன் தான்பயி லும்மிடம்
கல்லில் வெள்ளை அருவித் தண்கழுக் குன்றினை
மல்லின் மல்கு திரள்தோள் ஊரன் வனப்பினல்
சொல்லல் சொல்லித் தொழுவா ரைத்தொழு மின்களே.

திருவாரூர் பண்-புறநீர்மை

அந்தியு நண்பகலு மஞ்சுபதஞ் சொல்லி
முந்தி யெழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்
கெந்தை பிரானுரை யென்றுகொ லெய்துவதே.

மின்னெடுஞ் செஞ்சடையான் மேவிய வாரூரை
நன்னெடுங் காதன்மையா னுவலர்கோ னூரன்
பன்னெடுஞ் சொன்மலர் கொண்டிட்டன பத்தும்வல்லார்
பொன்னுடை விண்ணுலக நண்ணுவர் புண்ணியரே.

திருவாரூர் அற்புத பதிகம் பண்-செந்துருத்தி

மீளா வடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் திப்போ லுள்ளே கனன்று முகத்தான் மிகவாடி
ஆளா யிருக்கு மடியார்தங்க ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.

காரூர் கண்டத் தெண்டோன் முக்கண் கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே யடிப்பே ராரூரன்
பாரூ ரறிய என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே.

திருக்கூடலையாற்றூர் அற்புத பதிகம் பண்-புறநீர்மை

வடிவுடை மழுவேந்தி மதகரி யுரிபோர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழ லுமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகளிவ் வழிபோந்த அதிசய மறியேனே.

கூடலை யாற்றூரிற் கொடியிடை யவளோடும்
ஆட லுகந்தானை யதிசய மிதுவென்று
நாடிய இன்றமிழால் நாவல வூரன்சொல்
பாடல்கள் பத்தும்வல்லார் தம்வினை பற்றறுமே.

கோயில் பண்-குறிஞ்சி

மடித்தாடு மடிமைக்க ணன்றியே மனனே நீ வாழு நாளும், தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான், கடுத்தாடுங் கரதலத்தி றமருகமு மெரியகலுங் கரிய பாம்பும், பிடித்தாடி புலியூர்ச்சிற்றம்பலத்தெம் பெரு மானைப் பெற்றா மன்றே.

பாரூரு மரவல்கு லுமைநங்கை யவள்பங்கன் பைங்க ணேற் றன், ஊரூரன் தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான், ஆரூரன் தம்பிரா னாரூரன் மீகொங்கி லணிகாஞ்சி வாய்ப், பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்றம்பலத்தே பெற்றா மன்றே.

திருப்புக்கொளியூர் அவிநாசி அற்புத பதிகம் பண்-குறிஞ்சி

எற்றான் மறக்கே னெழுமைக்கு மெம்பெரு மானையே
உற்றாயென் றுன்னையே யுள்குகின்றேனுணர்ந்துள்ளத்
புற்றா டரவா புக்கொளி யூரவி நாசியே [தால்
பற்றாக வாழ்வேன் பசுபதியே பர மேட்டியே.

உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா ஆதியு மந்தமு மாயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளைதரச்சொல்லு காலனையே.

நீரேற வேறுநிமிர் புன்சடை நின்மல மூர்த்தியைப்
போரேற தேறியைப் புக்கொளி யூரவி நாசியைக்
காரேறு கண்டனைத் தொண்ட னாரூரன் கருதிய
சீரேறு பாடல்கள் செப்பவல் லார்க்கில்லை துன்பமே

திருநொடித்தான்மலை முத்திப் பதிகம் பண்-பஞ்சமம்

தானெனை முன்படைத்தா னதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர்கொள்ள மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை யுத்தமனே.

ஊழிதோ றூழிமுற்று முயர்பொன்னொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல வூரன்சொன்ன
ஏழிசை யின்றமிழா லிசைந்தேத்திய பத்தினையும்
ஆழிகட லரையா வஞ்சையப்பர்க் கறிவிப்பதே.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்—திருவாசகம்

எட்டாந் திருமுறை.

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே—யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

திருச்சிற்றம்பலம்.

சிவபுராணம்—குருவருள்பெற்று அருளியது

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏக னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்

சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பரவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅநின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பி
னாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோறு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்த வன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி

நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்த நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

திருச்சதகம்—திருச்சிற்றம்பலம்.

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசயபோற்றியென்னும்
கைதா னெகிழவிடே னுடையா யென்னைக் கண்டுகொள்ளே.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளே னினதடியாரோ டல்லா னரகம் புகினும்
எள்ளேன் றிருவருளாலே யிருக்கப்பெறி னிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல்லா தெங்க ளுத்தமனே.

நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே யிடையரு அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே.

ஆமாறுன் திருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமாநின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே.

யானேபொய் யென்னெஞ்சும் பொய் யென்னன்பும் பொய்
ஆனால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்றெளிவே தித்திக்கும்
மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே.

திருவெம்பாவை—திருச்சிற்றம்பலம்.

ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்கன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதே யென்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்கு
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒள்நித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக்கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவறியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்

தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழிச் சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்கா [வோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓத வுலவா வொருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையார் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யா வெண்ணீருடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தநற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனை நீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனுடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதித் திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூற
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப் [பணியாள்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்

பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் மில்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கணரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி யெல்லா வுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லா வுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல்லா வுயிர்க்கு மீரு மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருவம்மானை—திருச்சிற்றம்பலம்

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய்.

திருக்கோத்தும்பீ—திருச்சிற்றம்பலம்.

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

நானாரென் னுள்ளமார் ஞானங்களா ரென்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை யாண்டிலனேல் மதிமயங்கி
ஊனா ருடைதலையி லுண்பலிதே ரம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ.

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

நானுமென் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோந்
தானுந்தன் தையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

திருத்தெள்ளேணம்—திருச்சிற்றம்பலம்

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநா மறியவோ ரந்தணனா யாண்டுகொண்டான்
ஒருநாம மோருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

வான்கெட்டு மாருத மாய்ந்தழனீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டெ னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

திருச்சாழல்—திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ.

கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேருதே
இடபமுகந் தேறியவா றெனக்கறிய வியம்பேடீ
தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ.

சலமுடைய சலந்தரன்ற னுடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரனடிக்கீழ்
அலராக விடவாழி யருளினன்காண் சாழலோ.

அருந்தவருக் காலின்கீ ழறமுதலா நான்கினையும்
இருந்தவருக் கருளுமது எனக்கரிய வியம்பேடீ
அருந்தவருக் கறமுதலான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ.

திருப்பூவல்லி—திருச்சிற்றம்பலம்

இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்க ளத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

திருத்தோணோக்கம்—திருச்சிற்றம்பலம்

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ.

ஏழைத் தொழும்பனே னெத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்க மாடாமோ.

அன்னைப்பத்து—திருச்சிற்றம்பலம்

வேத மொழியர் வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையின ரன்னே யென்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதரிந் நாதனு ரன்னே யென்னும்.

நித்த மணாளர் நிரம்ப வழகியர்
சித்தத் திருப்பரா லன்னே யென்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்த ரானந்தரா லன்னே யென்னும்.

கொன்றை மதியமுங் கூவிள மத்தமும்
துன்றிய சென்னிய ரன்னே யென்னுந்
துன்றிய சென்னியின் மத்தமுன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே யென்னும்.

குயிற்பத்து—திருச்சிற்றம்பலம்

கீத மினிய குயிலே கேட்டியே லெங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவில் பாதாள மேழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை
ஆதி குணமொன்று மில்லான் அந்தமிலான்வரக் கூவாய்.

கொந்தண வும்பொழிற் சோலைப் பூங்குயி லேயிது கேள்நீ
அந்தண னாகிவந் திங்கே யழகிய சேவடி காட்டி
எந்தம ராமிவ னென்றிங் கென்னையு மாட்கொண் டருளுஞ்
செந்தழல் போற்றிரு மேனித் தேவர் பிரான்வரக் கூவாய்.

திருப்பள்ளியெழுச்சி—திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 1

அருணனிந் திரன்றிசை யணுகின னிருள்போய்
அகன்றது வுதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணூர்
திரள்நிரை யறுபத முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரு மானந்த மலையே
அலைகடலே பள்ளி யெழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக ளியம்பின வியம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழற் றாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழின ரொருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையின ரொருபால்
தொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபாற்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையு மாண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறுநின் றாயெனி னல்லாற்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லாற்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாயெங்கள் முன்வந்து
ஏதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின் மணவாளா

செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரு மறியார்
இதுவவன் றிருவுரு இவனவ னெனவே
யெங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தரகோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரு மறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமுதே பள்ளி யெழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரு நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமுதே கரும்பே விரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவு மலரவ னாசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையு நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி யெழுந்தரு ளாயே. 10

கோயின் மூத்த திருப்பதிகம்—திருச்சிற்றம்பலம்

உடையாளுன்ற னடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி அடியே னடுவு ளிருவீரு மிருப்பதானா லடியேனுன் அடியார் நடுவு ளிருக்கு மருளைப் புரியாய் பொன் னம்பலத்தெம் முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் றிருவார்த்தை, விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வேறிருந்துன் திருநாமந், தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவா வென்பாரவர்முன்னே, நரிப்பாய் நாயே னிருப்பேனோ நம்பி யினித்தானல்காயே.

கோயிற்றிருப்பதிகம்—திருச்சிற்றம்பலம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
யுள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவ பெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
இன்பமே யென்னுடை அன்பே.

குறைவிலா நிறைவே கோதிலா வமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெரு நீர்போற் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் னுடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே.

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே யீசா வுடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனொர்கைம் மாறே.

அடைக்கலப்பத்து—திருச்சிற்றம்பலம்

செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியே னுடையாயுன் னடைக்கலமே.

வெறுப்பனவே செய்யுமென் சிறுமையைநின் பெருமையினாற்
பொறுப்பவனே யராப் பூண்பவனே பொங்குகங்கை சடைச்
செறுப்பவனேநின் திருவருளாலென் பிறவியைவேர்
அறுப்பவனே யுடையா யடியேனுன் னடைக்கலமே.

வழங்குகின் றாய்க்குன் னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேனென் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளாய்
அழுங்குகின்றே னுடையா யடியேனுன் னடைக்கலமே.

வாழாப்பத்து—திருச்சிற்றம்பலம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகே னார்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பஞ்சின்மெல் லடியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அஞ்சினே னாயே னாண்டுநீ யளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

அருட்பத்து—திருச்சிற்றம்பலம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே சுரிகுழற் பணைமுலை மடந்தை, பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய் பங்கயத் தயனுமா லறியா, நீதியே செல்வத் திருப்பெருந் துறையில் நிறைமலர்க் குருந்த மேவியசீர், ஆதியே யடியே னாதரித் தழைத்தால் அதெந்துவே யென்றரு ளாயே.

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக் கண்ணனே விண்ணுளோர் பிரானே, ஒருத்தனே யுன்னை யோலமிட்டலறி யுலகெலாந் தேடியுங் காணேன், திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில் செழுமலர்க் குருந்த மேவியசீர், அருத்தனே யடியே னுதரித் தழைத்தால் அதெந்துவே யென்றரு ளாயே.

திருக்கழுக்குன்றப் பதிகம்—திருச்சிற்றம்பலம்

பிணக்கிலாத பெருந்துறைப் பெருமானுன் னுமங்கள் பேசுவார்க், கிணக்கிலாததோ ரின்பமேவருந் துன்பமே துடைத்தெம்பிரான், உணக்கிலாததோர் வித்துமேல்வினை யாமலென் வினை யொத்தபின், கணக்கி லாத்திருக் கோலநீவந்து காட்டினாய்க் கழுக்குன்றிலே.

பிட்டுநேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தனே
சட்டநேர்பட வந்திலாத சழக்கனேனுனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே சிறுநாயினுங் கடையாய வெங்
கட்டனேனையு மாட்கொள்வான்வந்து காட்டினாய் கழுக்குன்றிலே

மலங்கினேன் கண்ணினீரைமாற்றி மலங்கெடுத்த பெருந்துறை, விலங்கினேன் வினைக்கேடனே னினிமேல்வினைவ தறிந்திலேன், இலங்கு கின்றநின் சேவடிக ளிரண்டும் வைப்பிட மின்றியே கலங்கினேன் கலங்காமலே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே.

இயக்கி மாரறு பத்து நால்வரை யெண்குணஞ் செய்த ஈசனே
மயக்க மாயதோர் மும்ம லப்பழ வல்வினைக்கு ளழுந்தவுந்
துயக்க றுத்தெனையாண்டு கொண்டுநின் தூய்மலர்க் கழல்தந்தெனைக், கயக்கவைத் தடியார்மு னேவந்து காட்டினாய்க் கழுக்குன்றிலே.

கண்டபத்து—திருச்சிற்றம்பலம்

இந்திரிய வயமயங்கி யிறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே.

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வனப்பெய்தி யிருக்கும்வண்ணம்
பல்லோருங் காணவென்றன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரு மிறைஞ்சு தில்லை யம்பலத்தே கண்டேனே.

பூதங்க ளைந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்க ளனைத்துமாய் பேதமிலா பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே.

அச்சப்பத்து—திருச்சிற்றம்பலம்

புற்றில்வா ளரவு மஞ்சேன் பொய்யர்தம் மெய்யு மஞ்சேன்
கற்றைவார் சடையெம் அண்ணல் கண்ணுதல் பாதம்நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை யுண்டென நினைந்தெம் பெம்
கற்றிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே. [மாற்

பிணியெலாம் வரினு மஞ்சேன் பிறப்பினோ டிறப்பு மஞ்சேன்
துணிநிலா அணியி னான்றன் தொழும்பரோ டழுந்தி யம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீறு
அணிகிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே.

பிடித்தபத்து—திருச்சிற்றம்பலம்

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருப்படையாட்சி—திருச்சிற்றம்பலம்

கண்க ளிரண்டு மவன்கழல் கண்டு களிப்பன வாகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வு கடைப்படுமா
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடு மாகாதே [காதே
மாலறி யாமலர்ப் பாத மிரண்டும் வணங்குது மாகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல் பயின்றிடு மாகாதே
பாண்டி நன் ளுடுடை யான்படை யாட்சிகள் பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே.

சங்குதிரண்டு முரன்றெழு மோசை தழைப்பன வாகாதே
சாதி விடாத குணங்கள் நம்மோடு சலித்திடு மாகாதே
அங்கிது நன்றிது நன்றெனு மாயை யடங்கிடு மாகாதே
ஆசையெ லாமடி யா ரடி யோமெனு மத்தனை யாகாதே
செங்கய லொண்கண் மடந்தையர்சிந்தை திளைப்பன வாகா
சீரடி யார்கள் சிவானு பவங்கள் தெரிந்திடு மாகாதே [தே
எங்கு நிறைந்தமு தூறு பரஞ்சுட ரெய்துவ தாகாதே
ஈறறி யாமறை யோனெனை யாள எழுந்தரு ளப்பெறிலே.

ஆனந்தமாலை—திருச்சிற்றம்பலம்

தாயாய் முலையைத் தருவானே தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ நம்பி யினித்தா னல்குதியே
தாயே யென்றுன் தாளடைந்தேன் தயா நீ யென்பா லில்லையே
நாயே னடிமை யுடனாக ஆண்டாய் நான்றான் வேண்டாவோ.

நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லா நிகழ்வித்துப்
பெரியதென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும்பெருந்துறை
அரியபொருளே யவிநாசி யப்பா பாண்டி வெள்ளமே [யாய்
தெரிய வரிய பரஞ்சோதீ செய்வ தொன்று மறியேனே

அச்சோப்பதிகம்—முத்திப்பதிகம்

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும் வண்ண மருளியவா றார்பெறுவா ரச்சோவே.

செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்றன்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
அம்மையெனக் கருளியவா ருர்பெறுவா ரச்சோவே.

திருக்கோவையார்—திருச்சிற்றம்பலம்

திருவளர் தாமரைசீர்வளர் காவிகளீசர் தில்லைக்
குருவளர்பூங்குமிழ்கோங்குபைங்காந்தள்கொண்டோங்கு
மருவளர்மாலையோர்வல்லியினெல்கியனநடைவாய்ந் [தெய்வ
துருவளர் காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே.

போதோவிசும்போபுனலோபணிகளதுபதியோ
யாதோவறிகுவதேதுமரிதியமன்விடுத்த
தூதோவனங்கன்றுணையோவிணையிலிதொல்லைத்தில்லை
மாதோமடமயிலோவெனநின்றவர்வாழ்பதியே.

பூரண பொற்குடம் வைக்க மணிமுத்தம் பொன்பொதிந்த
தோரணம் நடுக தூரியம்ஆர்க்க தொன்மால் அயற்குங்
காரணன் ஏரணி கண்ணுத லோன்கடல் தில்லையன்ன
வாரண வும்முலை மன்றலென் றெங்கும் மணமுரசே.

பூங்கணையார் புனற்றென்புலியூர் புரிந்தம்பலத்து
ளாங்கணையாண்டுகொண்டாடும்பிரானடித்தாமரைக்கே
பாங்கணையானன்னபண்பணைக்கண்டிப்பரிசுரைத்தால்
ஈங்கணையார் தடுப்பார் மடப்பாவையையெய்துதற்கே.

சிறைவான்புனற்றில்லைச்சிற்றம்பலத்துமென்சிந்தையுள்ளும்
உறைவானுயர்மதிற்கூடலினுய்ந்தவொண்டீந்தமிழின்
துறைவாய்நுழைந்தனையோவன்றியேழிசைச்சூழல்புக்கோ
இறைவாதடவரைத்தோட்கென்கொலாம்புகுந்தெய்தியதே.

காகத்திருகண்ணிற்கொன்றேமணிகலந்தாங்கிருவர்
ஆகத்துளோருயிர்கண்டனம்யாமின்றியாவையுமாம்
ஏகத்தொருவனிரும்பொழிலம்பலவன்மலையில்
தோகைக்குந்தோன்றற்குமொன்றாய்வருமின்பத்துன்பங்களே.

திருவிசைப்பா—ஒன்பதாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே, தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே சித்தத்துட் டித்திக்குந் தேனே, அளிவள ருள்ளத் தானந்தக் கனியே யம்பல மாடரங்காக, வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே.

நீறணிபவளக்குன்றமே நின்ற நெற்றிக் கண்ணுடைய தோர் நெருப்பே, வேறணி புவனபோகமே யோகவெள்ளமே மேருவில்வீரா, ஆறணிசடையெம் அற்புதக்கூத்தா வம்பொன் செயம்பலத்தரசே, யேறணி கொடியெம் ஈசனே யுன்னைத் தொண்டனே னிசையுமா றிசையே.

கற்றவர்விழுங்குங் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணை மாகடலை,மற்றவ ரறியா மாணிக்கமலையை மதிப்பவர் மனமணி விளக்கைச், செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத் திரு வீழிமிழலை வீற்றிருந்த, கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள் ளங் குளிரவென்கண் குளிர்ந்தனவே.

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய் முகத்தலையகத் தமர்ந்தினிய, பாலுமா யமுதாம் பன்னகாபரணன் பனிமலர்த் திருவடியிணைமேல், ஆலையம்பாகி னனையசொற்கருவூ றமுது றழ்தீந்தமிழ்மாலை, சீலமாப்பாடு மடியவரெல்லாஞ் சிவபதங் குறுகி நின்றாரே.

தத்தையங் கனையார் தங்கண்மேல் வைத்த தயாவை நூரு யிரங்கூறிட், டத்திலங் கொருகூ றுன்கண் வைத்தவருக் கமருல களிக்கு நின் பெருமை, பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும் பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங், கைத்தல மடியேன் சென்னிமேல் வைத்த கங்கைகொண்ட சோளேச்சரத்தானே.

அற்புதத்தெய்வம் இதனின்மற் றுண்டே அன்பொடுதன்னை யஞ்செழுத்தின், சொற்பதத் துள்வைத் துள்ளமள்ளூறுந் தொண்டருக் கெண்டிசைக் கனகம், பற்பதக் குவையும் பைம் பொன்மாளிகையும் பவளவா யவர்பணைமுலையுங், கற்பகப்பொ ழிலும் முழுதுமாம் கங்கைகொண்ட சோளேச்சரத்தானே.

திருமகன் முருகன் தேவியேல் உமையாள் திருமகள் மரு மகன் தாயாம், மருமகன் மதனன் மாமனேல் இமவான் மலை யுடை யரையர்தம் பாவை,தருமலி வளஞுஞ் சிவபுரன் தோழன் தனபதி சாட்டியக் குடியார், இருமுகங் கழல்மூன் றேழுகைத் தலமேழ் இருக்கையி லிருந்தஈ சனுக்கே.

கடியார் கணம்புல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமருலகம் ஆளநீ ஆளாதே
முடியா முத்திவேள்வி மூவாயிரவ ரொடுங்
குடிவாழ்க்கை கொண்டுநி குலாவிக் கூத்தாடினையே.

அல்லியம் பூம்பழனத் தாமூர் நாவுக்கரசைச்
செல்ல நெறிவகுத்த சேவகனே தென்தில்லைக்
கொல்லை விடையேறி கூத்தா டரங்காகச்
செல்வம் நிறைந்த சிற்றம்பலமே சேர்ந்தனையே.

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையும் ஆட்கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே.

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாரு வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவாயிரவ ரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே.

சேந்தனாருளிய திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லைவளர்க நம்பத்தர்கள் வஞ்சகர்போயகலப், பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெலாம் விளங்க, அன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக் கருள் புரிந்து, பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப் பல் லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின், கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட் செய் மின் குழாம்புகுந்து, அண்டங் கடந்த பொருளள வில்லதோ ரானந்த வெள்ளப் பொருள், பண்டு மின்று மென்றுமுள்ள பொரு ளென்றே பல்லாண்டு கூறுதுமே.

நிட்டையிலா வுடனித் தென்னையாண்ட நிகரிலா வண்ணங் களுந், சிட்டன் சிவனடியாரைச் சீராட்டுந் திறங்களுமே சிந் தித்து, அட்டமூர்த்திக்கென் னகநெக வூறு மமிர்தினுக் கால நிழற். பட்டனுக் கென்னைத் தன்பாற் படுத்தானுக்கே பல் லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கட லீந்த பிரான், மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள், ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே யிடமாகப், பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

தாதையைத் தாளறவீசிய சண்டிக்கு மண்டத் தொடு முடனே, பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போன கமு மருளிச், சோதிமணிமுடித் தாமமு நாமமுந் தொண்டர்க்கு நாயகமும், பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

ஆரார்வந்தா ரமரர்குழாத்தி லணியுடை யாதிரைநாள்
நாராயணனொடு நான்முக னங்கி யிரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர்குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும் பல்லாண்டு கூறுதுமே.

திருமூலநாயனாரருளிய திருமந்திரம்

பத்தாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

சிவனொடொக்குந் தெய்வந் தேடினு மில்லை
அவனொடொப்பாரிங்கி யாவரு மில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவளச் சடைமுடித் தாமரை யானே.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாருமறிந்த பின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே.

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினில்
என்னரு நந்தி யெடுத்துரைத் தானே.

ஈசனடியா ரிதயங் கலங் கிடத்
தேசமு நாடுஞ் சிறப்பு மழிந்திடும்
வாசவன் பீடமு மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நம்நந்தி ஆணையே.

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடுஞ்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே.

ஊரெலாங் கூடி யொலிக்க அழுதிடப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடை கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூச மகிழ்வீரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே.

அப்பனை நந்தியை யாராவமுதினை
ஒப்பிலி வள்ளலை யூழிமுதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமினேத்தினல்
அப்பரிசீச னருள்பெற லாமே.

திலமத்தனையே சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோகமுந் தரும்
நிலமத்தனை பொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமு மற்றே பரபோகமுங் குன்றுமே.

புண்ணியஞ் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு
அண்ண லதுகண் டருள்செயா நிற்கும்
எண்ணிலி பாவிக ளெம்மிறை யீசனை
நண்ணறி யாம னழுவு கின்றுரே.

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே.

சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற்பத மாம்அந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யாரறி வாரே.

ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண் தாமரை
பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரஞ் சொல்லுமே.

வித்தகமாகிய வேடத்த ருண்ட வூண்
அத்த னயன்மா லருந்திய வண்ணமாம்
சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியா மென்று நம் மூலன் மொழிந்ததே.

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிரானடி பேணார்
பெறுதற்கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே.

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண வியமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தின்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே.

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை யர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தற்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டிற்குப் பஞ்சமு மாமென்றே
சீர்கொண்ட நந்தி யெடுத்துரைத் தானே.

கல்லா வரசனுங் காலனு நேரொக்குங்
கல்லா வரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா வரச னறமோரான் கொல்லென்பான்
நல்லாரைக் கால னணுகி நில்லானே.

மனமாயை மாயை இம்மாயை மயக்க
மனமாயை தான்மாய மற்றொன்று மில்லை
பிணமாய்வ தில்லை பிதற்றவும் வேண்டா
தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே.

பதினோராந் திருமுறை

திருஆலவாயுடையார் அருளிய திருமுகப் பாசுரம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆலவாயின்
மன்னிய சிவன்யான் மொழிதருமாற்றம்
பருவக் கொண்மூப் படியென பாவலர்க்
கொருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமாமதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

காரைக்காலம்மையார்

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெண்பற்குழி வயிற்றுப், பங்கிசிவந்திரு பற்கணீண்டு பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய், தங்கியலரி யுலறுகாட்டிற் றழ்சடை யெட்டுத்திசையும் விசி, அங்கங்குளிர்ந்தன லாடுமெங்க ளப்ப னிடந்திரு வாலங்காடே.

ஒப்பினையில்லவன் பேய்கள்கூடி யொன்றினை யொன்றடித் தொக்கலித்துப், பப்பினையிட்டுப் பகண்டைபாடப் பாடிருந்தந் நரியாழமைப்ப, அப்பனையணிதிரு வாலங்காட்டு ளடிகளைச் செடிதலைக் காரைக்காற்பேய், செப்பிய செந்தமிழ் பத்தும்வல் லார் சிவகதி சேர்ந்தின்ப மெய்துவாரே.

அற்புதத் திருவந்தாதி

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனுஞ்—சுடருருவில்
என்பறக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு.

ஐயடிகள்காடவர்கோன் நாயனார்—க்ஷேத்திரத் திருவெண்பா

ஓடுகின்ற நீர்மை யொழிதலுமே யுற்றுருங்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று—நாடுகின்ற
நல்லச் சிற்றம்பலமே நண்ணாமு னன்னெஞ்சே
தில்லைச் சிற்றம்பலமே சேர்.

குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி—வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை.

தொட்டுத் தடவித் துடிப்பொன்றுங் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டு—கட்டி
யெடுங்களத்தா வென்னாமுன் னேழை மடநெஞ்சே
நெடுங் களத்தான் பாதம்நினை.

சேரமான்பெருமாணயனர்—பொன்வண்ணத்தந்தாதி

பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணமேனி பொலிந் திலங்கு, மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்குன்றந், தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மால்விடை தன்னைக்கண்ட, மென்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணமாகிய வீசனுக்கே.

ஒழித்தேன் பிறவியை யூர்ந்தே னுவகையை யோங்கிற்றுள்ள
மிழித்தே னுடம்பினை யேலேன் பிறரிடை யிம்மனையும்
பழித்தேன் பழியே விளைக்கும் பஞ்சேந்திரியக் குஞ்சரமுந்
தெழித்தேன் சிவனடி சேர்ந்தே னினிமிகத் தெள்ளியனே.

கபிலதேவ நாயனர்—மூத்த நாயனர் திருவிரட்டைமணிமாலை

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

நக்கீரதேவ நாயனர்—திருமுருகாற்றுப்படை

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய்என் உள்ளத் துறை.

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரரிடர் தீர்த்ததுவும் இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே.

அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

நக்கிரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினுல்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளி
தான்நினைத்த எல்லாம் தரும்.

பட்டினத்துப்பிள்ளை—கோயினுன்மணிமாலை

பூமே லயனறியா மோலிப் புரத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம்—பாமேவு
மேத்துகந் தான்றில்லை யிடத்துகந்தா னம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை.

கிழவருமாய் நோய்மூப்புக் கீழ்பட்டுக் காமத்
துழவரும்போய் ஓயுமா கண்டோம்—மொழிதெரிய
வாயினுல் இப்போதே மன்றில் நடமாடும்
நாயனு ரென்றுரைப்போம் நாம்.

வாழ்வாகவுந் தங்கள் வைப்பாகவு மறையோர் வணங்க
வாள்வாய் திருத்தில்லையம்பலத்தா யுன்னையன்றி யொன்றைத்
தாழ்வாரறியாச் சடிலனஞ்சை யுண்டிலையாகி லன்றே
மாள்வார் சிலரையன்றே தெய்வமாக வணங்குவதே.

நம்பியாண்டார்நம்பி—ஆளுடையபிள்ளையார் மும்மணிக்கோவை

என்றும் அடியவர் உள்ளத் திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்
தொன்றும் புலவர்கள் யாப்புக்குரியன ஒண்கலியைப்
பொன்றுங் கவுணியன் சைவ சிகாமணி பொன்னடியே.

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றேணி கண்டீர்—நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்.

ஞான ஆரூரரைச் சேரரையல்லது நாமறியோம், மானவ ஆக்கையொடும் புக்கவரை வளரொளிப்பூண், வானவராலும் மருவற்கரிய வடகயிலைக், கோனவன் கோயில் பெருந்தவத் தோர் தங்கள் கூட்டத்திலே.

வருவாசகத்தினில் முற்றுணர்ந்தோனை வண்தில்லைமன்னைத்
திருவாதவூர்ச் சிவபாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார்தரு திருக்கோவை கண்டேயுமற்றப் பொருளைத்
தெருளாத வுள்ளத்தவர் கவிபாடிச் சிரிப்பிப்பரே.

இலைமாடென்றிடர் பரியாரிந்திரனேயொத் துறுகுறைவற்
ருலும், நிலையாதிச்செல்வ மெனவே கருதுவர் நீள்சன்மக்கடல்
இடையிற்புக்,கலையார் சென்றரன் நெறியாகுங்கரை அண்ணப்
பெறுவர்கள் வண்ணத்திண், சிலைமாடந்திகழ் புகழ் ஆமூருறை
திருநாவுக்கர சென்போரே.

கொடுத்தான் முதலைகொள் பிள்ளைக்குயிரன்று புக்கொளியூர்க்
கொடுத்தான் மதுரகவி யவிநாசியை வேடர்சுற்றம்
படுத்தான் திருமுருகன் பூண்டியினிற் பராபரத்தேன்
மடுத்தான் அவன் என்பர் வன்தொண்டனுகின்ற மாதவனே.

சேக்கிழார் நாயனர் அருளிய பெரியபுராணம்

பன்னிரண்டாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஊன டைந்த வுடம்பின் பிறவியே
தான டைந்த வுறுதியைச் சாருமாற்
றேன டைந்த மலர்ப்பொழிற் றில்லையுண்
மா ந டஞ்செய் வரதர்பொற் ருடொழ.

எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம்.

மாநிலங் காவலனுவான் மன்னுயிர் காக்குங் காலைத்
தானதனுக் கிடையூறு தன்னுல் தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனே.

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின்மேலாஞ்
சிற்பரவி யோமமாகுந் திருச்சிற்றம் பலத்துனின்று
பொற்புட னடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகி
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி.

ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ள வளப்பருங் கரணங்களுன்கும், சிந்தையேயாக குணமொருமூன்றுந் திருந்துசாத்துவிகமேயாக, இந்துவாழ் சடையானாடு மானந்தவெல்லையில் தனிப்பெருங் கூத்தின், வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே
மண்டுகாதலி னாதனத்திடை வைத்தருச்சனை செய்தபின்
உண்டிநாலு விதத்தி லாறு சுவைத்திறத்தினி லொப்பிலா
வண்டர்நாயகர் தொண்ட ரிச்சையி லமுதுசெய்ய வளித்துளார்,

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலா ரடியார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணினா லவர் நல்விழாப் பொலிவுகண்டார்தல்
உண்மையாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார்.

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தி னெழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

மங்கையர்க்குத் தனியரசி எங்கள்தெய்வம் வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கைமானி, செங்கமலத் திருமடந்தை கன்னிநாடாள் தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை, எங்கள்பிரான் சண்பையர்கோ னருளினாலே இருந்தமிழ் நாடுற்றஇடர் நீக்கித் தங்கள், பொங்கொளிவெண் திருநீறு பரப்பினாரைப் போற்றுவார் கழலெம்மால் போற்றலாமே.

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என வுரைத்தருள
அண்ணலார் தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து.

செய்வினையுஞ் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும், மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே, இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்கில்லையென, உய் வகையாற் பொருள் சிவன்என் றருளாலே உணர்ந்தறிந்தார்.

செம்மைபெற எடுத்ததிருத் தோடுடைய செவியன் எனும்
மெய்ம்மைமொழித் திருப்பதிகம் பிரமபுரம் மேவினுர்
தம்மை அடையாளங்களுடன் சாற்றித் தாதையார்க்கு
எம்மையிது செய்தபிரான் இவனன்றே என இசைத்தார்.

சோதிமுத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீதுதாழ்ந்து வெண் ணீற்றொளி போற்றிநின்
ருதியார் அருளாதலில் அஞ்செழுத்
தோதி ஏறினுர் உய்ய உலகெலாம்.

ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச்சொலாமென்
ருனசீர் நமச்சி வாயத் திருப்பதிகத்தை யங்கண்
வானமு நிலனுங்கேட்க வருள்செய்திம் மணத்தில் வந்தோ
ரீனமாம் பிறவிதீர யாவரும் புகுக வென்ன.

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணுமை உணராதேன்.

நீற்ருனிறைவாகிய மேனியுடனிறையன்புறு சிந்தையினேச மிக, மாற்ருர்புரமாற்றிய வேதியரைமருளும் பிணிமாயை யறுத்திடுவான், கூற்ருயினவாறு விலக்ககிலீரென நீடிய கோதிற் றிருப்பதிகம், போற்ருலுலகேழின் வருந்துயரம் போமாறெதிர்நின்று புகன்றனரால்.

மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே னெனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீ ழாண்டவர செய்தினுர்.

மலர்மிசை அயனும்மாலும் காணுதற்கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய்நல்லூர் ஆவணப் பழமைகாட்டி
உலகுய்ய ஆண்டுகொள்ளப் பெற்றவர் பாதம்உன்னித்
தலைமிசை வைத்துவாழும் தலைமைநந் தலைமையாகும்.

கொத்தார் மலர்க்குழலாளொரு கூறுயடியவர்பால்
மெய்த்தாயினு மினியானையவ் வியநாவலர் பெருமான்
பித்தா பிறைசூடியெனப் பெரிதாந் திருப்பதிகம்
இத்தாரணி முதலா முலகெல்லாம் உயவெடுத்தார்.

அடியனேன் பிழைபொறுத் தெனையாண்டு கொண்டத் தொடக் கினை நீக்கி, முடிவிலா நெறிதரும் பெருங்கருணையென் றரத்ததோ வெனமுன்னர்ப், படியு நெஞ்சொடு பன்முறை பணிந்தெழும் பரம்பரை யானந்த, வடிவு நின்றது போன் றின்ப வெள்ளத்து மலர்ந்தனர் வன்றொண்டர்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார், பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை யென்றும், மறவாமை வேண்டும் இன்னும்வேண்டும் நான் மகிழ்ந்துபாடி, அறவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்கஎன்றார்.

மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன்
துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்
போதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே.

அண்டர்பிரானுந் தொண்டர்தமக் கதிபனுக்கி யனைத்துநாம், உண்ட கலமு முடுப்பனவுஞ் சூடுவனவு முனக்காகச், சண்டீ சனுமாம் பதந்தந்தோமென் றங்கவர் பொற் றடமுடிக்குத், துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்.

என்று மின்பம் பெருகு மியல்பினு
லொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி உலகெலாம்.

திருச்சிற்றம்பலம்.

சேக்கிழார் துதி

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர் சேக்கிழா ரடிபோற்றி.

அருணகிரிநாத சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

திருப்புகழ்.

வெண்பா

திருப்புகழைக் கற்கத் திருப்புகழைக் கேட்கத்
திருப்புகழை நித்தஞ் செபிக்கத்—திருப்புகழை
அர்ச்சிக்க முத்தியெளி தாகுமே கூற்றைவென்று
கொர்ச்சிக்க லாமே கெடி.

விநாயகர் துதி

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவர்
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட யெழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுரைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

திருப்பரங்குன்றம்—1-வது படைவீடு

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்தி லன்பல மலர்கொடு னடியிணை
உறப்ப ணிந்தில ஒருதவ மிலனுன தருள்மாரு
உளத்து ளன்பின ருறைவிட மறிகிலன்
விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்
உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன் மலைபோலே
கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலித னுழையினர்
கதித்தடர்ந்தெறி கயிறடு கதைகொடு பொருபோதே
கலக்கு றுஞ்செய லொழிவற அழிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தி லென்பய மறமயில் முதுகினில் வருவாயே
வினைத்த லந்தனி லலகைகள் குதிகொள
விழுக்கு டைந்துமெ யுகுதசை கழுகுண
விரித்த குஞ்சிய ரெனுமவு ணரையமர் புரிவேலா
மிகுத்த பண்பயில் குயில்மொழி யழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை யுடையோனே
தினத்தி னஞ்சதுர் மறைமுனி முறைகொடு
புனற்சொ ரிந்தலர் பொதியவி ணவரொடு
சினத்தை நிந்தனை செயுமுனி வரர்தொழ மகிழ்வோனே
தெனத்தெ னந்தென எனவரி அளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழினிறை
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே.

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

திருச்செந்தூர்—2-வது படைவீடு

இயலிசையி லுசித வஞ்சிக் கயர்வாகி
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே
உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி
உனையெனது ளறியு மன்பைத் தருவாயே

மயில்தகர்க ளிடைய ரந்தத் தினைகாவல்
வனசகுற மகளை வந்தித் தணைவோனே
கயிலைமலை அனைய செந்திற் பதிவாழ்வே
கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே.

திருவாவினன்குடி—பழனி 3-வது படைவீடு

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித சாமீ நமோநம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ
தீப மங்கள ஜோதி நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

திமிர வுததி யனைய நரக செனன மதனில் விடுவாயேல்
செவிடு குருடு வடிவு குறைவு சிறிது மிடியும் அணுகாதே
அமரர் வடிவு மதிக குலமு மறிவு நிலையும் வரவேநின்
அருளதருளி யெனையுமனதொ டடிமைகொளவும் வரவேணும்
சமரமுகவெ லசுரர் தமது தலைக ளுருள மிகவேநீள்
சலதி யலற நெடிய பதலை தகர அயிலை விடுவோனே
வெமர வணையி லினிது துயிலும் விழிகள் நளினன் மருகோனே
மிடறு கரியர் குமர பழநி விரவும் அமரர் பெருமாளே.

சுவாமிமலை—4-வது படைவீடு

நாவேறு பாம ணத்த பாதார மேநி னைத்து
நாலாறு நாலுபத்து வகையான
நாலாறு மாகமத்தி னூலாய ஞான முத்தி
நாடோறு நானுரைத்த நெறியாக
நீவேறெ னாதிருக்க நான்வேறெ னாதிருக்க
நேராக வாழ்வ தற்குன் அருள்கூற
நீடார்ச டாதரத்தின் மீதே பரா பரத்தை
நீகாணெ னாஅ னைச்சொல் அருள்வாயே
சேவேறு மீசர் சுற்ற மாஞான போத புத்தி
சீராக வேயு ரைத்த குருநாதா
தேரார்கள் நாடுசுட்ட சூரார்கள் மாள வெட்டு
தீராகு காகு றத்தி மணவாளா
காவேரி நேர் வடக்கி லேவாவி பூம ணத்த
காவார் சுவாமி வெற்பின் முருகோனே
கார்போலு மேனி பெற்ற மாகாளி வாலை சத்தி
காமாரி வாமி பெற்ற பெருமாளே.

பாதி மதிநதி போது மணிசடை நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள் பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காகமுற அருள் மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு காலில் வழிபட அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல காளும் வகைதரு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள் சூழ வலம்வரும் இளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு வாமி மலைதனில் உறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட வேலை விடவல பெருமாளே.

குன்றுதோராடல் திருத்தணிகை—5-வது படைவீடு

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்
செகுத்தவ ருயிர்க்கும் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்கும் செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுந்தகு தகுத்தந் தனபேரி

தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்கும்
    தளத்துட னடக்கும் — கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தமலை முற்றுஞ்
    சிரித்தெரி கொளுத்துங் — கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தொடு சுகித்தொண்
    திருத்தணி யிருக்கும் — பெருமாளே.

ஓதி வைத்தவர் கூலிகொ டாதவர்
    மாத வர்க்கதி பாதக மானவர்
    பூச லிற்கன லாயெரி காளையர் — மறையோர்கள்
ஊர்த னக்கிடரே செய்வ ரேழையர்
    ஆர்த னக்குமு தாசின மானவர்
    ஓது முத்தம நீதியை நாடிலர் — இரவோருக்கு
ஏது மித்தனை தானமி டாதவர்
    பூத லத்தினி லோரம தானவர்
    ஏதி னிற்சிவ ஞானியை மோனியை — இகழ்வோரும்
ஏக சிற்றறி ஞானமி லாதவர்
    யோக மற்றிடு போகித மீறினர்
    ஈன ரித்தனை பேர்களு மேழ்நர — குழல்வாரே
தாத தத்தத தாதத தாதத
    தூது துத்துது தூதுது தூதுது
    சாச சச்சச சாசச சாசச — சசசாச
டாட டட்டட டாடட டாடட
    டுடு டுட்டுடு டுடுடு டுடுடு
    டீடி டிட்டிடி டீடிடி டீடிடி — டிடிடீடி
தீதி தித்திதி தீதிதி தீதிதி
    தோதிகுத்திகு தோதிகு தோதிகு
    சேகு செக்குகு சேகுகு சேகுகு — செகுசேகு
சேயனப்பல ராடிட மாகலை
    ஆயு முத்தமர் கூறிடும் வாசகர்
    சேர்தி ருத்தணி மாமலை மேவிய — பெருமாளே.

கதிர்காமம்

திருமக ளுலாவு மிருபுயமு ராரி
    திருமருக நாமப் — பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
    தெரிதரு குமாரப் — பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடு
    மரகத மயூரப் — பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
    மருவு கதிர்காமப் — பெருமாள்காண்

அருவரைகள் நீறு படஅசுரர் மாள
  அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அறவுபிறை வாரி விரவுசடை ஈசர்
  அருள்செய் குருநாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
  இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
  இருதனவி நோதப் பெருமாளே.

உத்தரமேரூர்

தோலெலும்பு சீநரம்பு பீளைதுன்ற கோழைபொங்கு
  சோரிபிண்ட மாயுருண்டு வடிவான
தூலபங்க காயம்வம்பி லேசுமந்து நான்மெலிந்து
  சோருமிந்த நோயகன்று துயராற
ஆலமுண்ட கோனகண்ட லோகமுண்ட மால்விரிஞ்ச
  ஞரணங்க ளாகமங்கள் புகழ்தாளும்
ஆனனங்கள் மூவிரண்டு மாறிரண்டு தோளுமங்கை
  ஆடல்வென்றி வேலுமென்றும் நினைவேனோ
வாலசந்த்ர சூடிசந்த வேதமந்த்ர ரூபியம்பை
  வாணிபஞ்ச பாணிதந்த முருகோனே
மாயையைந்து வேகமைந்து பூதமைந்து நாதமைந்து
  வாழ்பெருஞ் சராசரங்கள் உறைவோனே
வேலையன்பு கூரவந்த ஏகதந்த யானைகண்டு
  வேடர்மங்கை ஓடியஞ்ச அணைவோனே
வீரமங்கை வாரிமங்கை பாரின்மங்கை மேவுகின்ற
  மேருமங்கை ஆளவந்த பெருமாளே.

திருச்செந்தூர்

துன்பங்கொண் டங்க மெலிந்தற
  நொந்தன்பும் பண்பு மறந்தொளி
  துஞ்சும்பெண் சஞ்சல மென்பதில் அணுகாதே
இன்பந்தந் தும்பர்தொ ழும்பத
  கஞ்சந்தந் தஞ்ச லெனும்வழி
  என்றென்றுந் தொண்டு செயும்படி அருள்வாயே
நின்பங்கொன் றுங்குற மின்சர
  ணங்கண்டுந் தஞ்ச மெனும்படி
  நின்றன்பின் றன்படி கும்பிடும் இளையோனே
பைம்பொன்சிந் தின்றுறை தங்கிய
  குன்றெங்குஞ் சங்குவலம்புரி
  பம்புந்தென் செந்திலில் வந்தருள் பெருமாளே.

சிதம்பரம்

கனக சபைமேவு மெனது குருநாத
கருணை முருகேசப் பெருமாள்காண்
கனக நிறவேத னபயமிட மோது
கரகமல சோதிப் பெருமாள்காண்
வினவு மடியாரை மருவி விளையாடு
விரகரச மோகப் பெருமாள்காண்
விதி முனிவர் தேவ ரருணகிரி நாதர்
விமலசுரர் சோதிப் பெருமாள்காண்
சனகி மணவாளன் மருகனென வேத
சதமகிழ் குமாரப் பெருமாள்காண்
சரண சிவகாமி யிரண குலகாரி
தருமுருக நாமப் பெருமாள்காண்
எனது மனமேவு மமிர்த குறமாதொ
டியல்பரவு காதற் பெருமாள்காண்
இணையி லிபதோகை மதியின் மகளோடு
மியல்புலி யூர்வாழ்பொற் பெருமாளே

இருவினையின் மதிம யங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை யென்றற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே.

பழமுதிர்சோலை—6-வது படைவீடு

அகரமு மாகி அதிபனுமாகி அதிகமுமாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி அவர்மேலாய்
இகரமு மாகி எவைகளு மாகி இனிமையு மாகி வருவோனே
இருநிலமீ தி லெளியனும் வாழ எனதுமு னோடி வரவேணும்
மகபதி யாகி மருவும் வலாரி மகிழ் களி கூறும் வடிவோனே
வனமுறை வேடன் அருளியபூசை மகிழ்கதிர்காமம் உடையோனே
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடும் மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு பெருமாளே.

வாதினை யடர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயம தொழிந்து தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபத மணிந்து பணியேனே

ஆதியொடு மந்த மாகிய நலங்கள்
ஆறுமுக மென்று தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயி லென்ப தறியேனே
நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானில மலைந்து திரிவேனே
நாகமணி கின்ற நாதநிலை கண்டு
நாடியதில் நின்று தொழுகேனே
சோதி யுணர்கின்ற வாழ்வு சிவமென்ற
சோகமது தந்து எனையாள்வாய்
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற பெருமாளே.

வள்ளிமலை

அல்லவிழி யாலு முல்லைநகை யாலு
மல்லல்பட ஆசைக் கடலீயும்
அள்ளவினி தான நள்ளிரவு போலு
முள்ளவினை யாரத் தனமாரும்
இல்லுமிளை யோரு மெல்லஅய லாக
வல்லெருமை மாயச் சமனும்
எள்ளியென தாவி கொள்ளைகொளு நாளில்
உய்யவொரு நீபொற் கழல்தாராய்
தொல்லை மறைதேடி யில்லையெனு நாதர்
சொல்லுமுப தேசக் குருநாதா
துள்ளிவிளை யாடு புள்ளியுழை மேவு
வெள்ளிவன மீதுற் றுறைவோனே
வல்லசுரர் மாள நல்ல சுரர்வாழ
வல்லவடி வேலைத் தொடுவோனே
வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவு
வள்ளிமண வாளப் பெருமாளே.

திருக்கழுக்குன்றம்

எழுகு நிறைநாபி அரிபிரமர் சோதி
இலகுமரன் மூவர் முதலானோர்
இறைவியெனு மாதி பரை முலையி லூறி
எழுமமிர்தம் நாறு கனிவாயா
புழுகொழுகு காழி கவுணியரில் ஞான
புனிதனென ஏடு தமிழாலே
புனலிலெதி ரேற அமணர் கழுவேற
பொருத கவிவீர குருநாதா

மழுவுழை கபால வலியதிரி சூல
மணிகரவி நோதர் அருள்பாலா
மலரயனை நீடு சிறைகொடவன் வேலை
வளமைபெற வேசெய் முருகோனே
கழுகுதொழு வேத கிரிசிகரி வீறு
கதிருலவு வாசல் நிறைவானோர்
கடலொலிய தான தமிழ்மறைக ளோது
கதலிவன மேவு பெருமாளே.

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

சுவாமிமலை

தெருவினில் நடவா மடவார் திரண்டொ ருக்கும் வசையாலே
தினகர னெனவே லையிலே சிவந்து திக்கும் மதியாலே
பொருசிலை வளையா இளையா மதன்தொ டுக்குங் கணையாலே
புளகித முலையா லலையா மனஞ் சலித்தும் விடலாமோ
ஒருமலை யிருகூ றெழவே யுதம்புரி சித்ர வடிவேலா
ஒளிவளர் திருவே ரகமே யுகந்து நிற்கும் முருகோனே
அருமறை தமிழ்நூ லடைவே தெரிந்து ரைக்கும் புலவோனே
அரியரி பிரமா தியர்கால் விலங்க விழ்க்கும் பெருமாளே.

பழநி

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான் நினைந்தருட் பெறுவேனோ
இபமா முகன்றனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

ஒருபொழுது மிருசரண நேசத் தேவைத் துணரேனே
உனதுபழநி மலையெனு மூரைச் சேவித் தறியேனே
பெருபுவியி லுயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே
பிறவியற நினைகுவனெ னுசைப் பாடைத் தவிரேனோ

துரிதமிடு நிருதர்புர சூரைக் காரப் பெருமாளே
தொழுதுவழி படுமடியர் காவற் காரப் பெருமாளே
விருதுகவி விதரணவி நோதக்காரப் பெருமாளே
விறன்மறவர் சிறுமிதிரு வேளைக் காரப் பெருமாளே.

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறெடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.

ஊனே றெலும்பு சீசீ மலங்க
ளோடே நரம்பு கசுமாலம்
ஊழ்நோயடைந்து மாசானமண்டு
மூணே டுழன்ற கடைநாயேன்
நானா ரொடுங்க நானார்வணங்க
நானார் மகிழ்ந்து உனையோத
நானா ரிரங்க நானா ருணங்க
நானார் நடந்து விழநானார்
தானே புணர்ந்து தானே யறிந்து
தானே மகிழ்ந்து அருளூறித்
தாய்போல் பரிந்த தேனோடுகந்து
தானே தழைந்து சிவமாகித்
தானேவளர்ந்து தானேயிருந்த
தார்வேணி யெந்தை யருள்பாலா
சாலோகதொண்டர் சாமிபதொண்டர்
சாருப தொண்டர் பெருமாளே.

காதி மோதி வாதாடு நூல்கற் றிடுவோரும்
காசு தேடி ஈயாமல் வாழப் பெறுவோரும்
மாது பாகர் வாழ்வே யெனுநெக் குருகாரும்
மாறிலாத மாகால னூர்புக் கலைவாரே
நாத ரூப மாநாத ராகத் துறைவோனே
நாக லோக மீரேழு பாருக் குரியோனே
தீதி லாத வேல்வீர சேவற் கொடியோனே
தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளே.

வேதவெற்பி லேபுனத்தில் மேவிநிற்கும் அபிராம
வேடுவச்சி பாதபத்ம மீதுசெச்சை முடிதோய
ஆதரித்து வேளைபுக்கு ஆறிரட்டி புயநேய
ஆதரத்தோ டாதரிக்க ஆனபுத்தி புகல்வாயே
காதுமுக்ர வீரபத்ர காளிவெட்க மகுடாமா
காசமுட்ட வீசிவிட்ட காலருட்சொல் உமையாள்பால்
ஓதிவைத்த தாதைகற்க ஓதுவித்த குருநாதா
ஓரெழுத்தி லாறெழுத்தை யோதுவித்த பெருமாளே.

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாள் நினைப்பை இருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனக மேரு ஒத்த புயவீரா
மதுர வாணி உற்ற கழலோனே
வழுதி கூன் நிமிர்த்த பெருமாளே.

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேர மட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூட மட்டி பவவினையிலே சனித்த
தமியன்மிடி யால்ம யக்கம் உறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனக்குறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலை செச்சை
கமழுமண மார்க டப்ப மணிவோனே
தருணமிதை யாமி குத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞான முத்தி பரகதியு நீ கொடுத்து
உதவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா

அருண தள பாத பத்ம மநுதினமுமே துதிக்க
அரியதமிழ் தான ளித்த மயில்வீரா
அதிசய மநேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிருவே ரகத்தின் முருகோனே.

நிறைமதி முகமெனும் ஒளியாலே
நெறிவிழி கணைபுரி நிகராலே
உறவுகொள் மடவர்கள் உறவாமோ
உனதிரு வடியினி அருள்வாயே
மறைபயி லரிதிரு மருகோனே
மருவல ரசுரர்கள் குலகாலா
குறமகள் தனைமணம் அருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே.

ஈனமிகுத் துளபிறவி அணுகாதே
யானுமுனக் கடிமையென வகையாக
ஞானஅருட் டனையருளி வினைதீர
நாணமகற் றியகருணை புரிவாயே
தானதவத் தினின்மிகுதி பெறுவோனே
சாரதியுத் தமிதுணைவ முருகோனே
ஆனதிருப் பதிகமருள் இளையோனே
ஆறுதிருப் பதியில்வளர் பெருமாளே.

பரிமள களபசு கந்தச் சந்தத் தனமானார்
படையம படையென வஞ்சிக் குங்கட் கடையாலே
வரியளி நிறைமுரல் கொங்குக் கங்குற் குழலாலே
மறுகிடு மருளனை இன்புற் றன்புற் றருள்வாயே
அரிதிரு மருகக டம்பத் தொங்கற் றிருமார்பா
அலைகுமு குமுவென வெம்பக்கண்டித் தெறிவேலா
திரிபுர தகனரும் வந்திக் குஞ்சற் குருநாதா
செய செய ஹர ஹர செந்திற் கந்தப் பெருமாளே.

எழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி யவதாரம்
இனியுன தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக முடியாது
கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவும் அயர்வானார்
கடனுன தபய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் தருவாயே

விழுதிக முழகி மரகத வடிவி
விமலிமு னருளு முருகோனே
விரிதல மெரிய குலகிரி நெரிய
விசைபெறு மயிலில் வருவோனே
எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை யுடையோனே
இமையவர் முநிவர் பரவிய புலியூ
ரினில்நட மருவு பெருமாளே.

தெய்வயானையம்மையார் துதி

சங்கரிதன் மருமகளைச் சங்கரிதன் மகளைச் சங்கரிக்குஞ் சங்கரனை மாமனெனுந் தயலை, வெங்கரிதந் திடுபிடியை விண்ணவர்கோன் சுதையை விண்ணவர்கள் பணிந்தேத்தும் விண்ணுலகத்தணங்கைப், பைங்கழுநீர் விழியாளைப் பைங்கழுநீர் நிறமே படைத்தாளைப் பைங்கழுநீர் செங்கரங்கொண் டாளைச், செங்கமலை தருமமுதைக் கந்தரிடத் தமருந், தெய்வயானையைத் தொழுது திருவருள்பெற் றிடுவாம்.

வள்ளியம்மையார் துதி

மாதவனோர் மாதவனாய் மாதவஞ்செய் திடலும், வனமானாய் வந்தெதிர்ந்த மலர்மானைப் புணரப், பூதலமங் கையருருவாயவதரித்து வள்ளிப், பொருப்புறையும் பொருப்பர்மனை விருப்பமுடன் வளர்ந்து, தீதகலுந் தினைகாத்து வேங்கையுருவெடுத்த, செவ்வேளை யவ்வேளைச் சேர்ந்திருகைக் கோளுங், காதலுடன் புரிந்திறைவன் வலப்பாகத் தமருங், கன்னியெனும் வள்ளிகழ லுன்னிவழுத் திடுவாம்.

சிவகிரி வகுப்பு

மெத்த மெத்த வக்ர மத்தின் மெத்த மெத்த விக்ர மத்தின்
மெத்த மெத்த வுக்ர வெற்றி மிகுபாசமே
விட்டு விட்டு றுக்கு றுக்கு கட்டு கட்டு குத்து குத்து
வெட்டு வெட்டெ னச்சி னத்து நமனுடியே
சத்த மிட்ட தட்டி நெட்ட யிற்றி னைக்க டித்து றுக்கு
தர்க்க மிட்டெ னைப்பி டிக்க வருபோதிலே
தத்த ளிக்கும் புத்தி யைத்தி டப்ப டுத்தி யொத்தி டத்த
னிப்பு றுத்தி மெய்த்து னைக்கு வரவேணுமே


எத்த லத்து மெப்ப திக்கு மெப்ப டிக்கு மெச்சரித்து
நற்ப தத்தை யுச்ச ரிக்கு நினைவாகியே
இட்டம் வைத்த வர்க்க நுக்ர கச்ச முத்ர வித்தை யிற்ப்ர
சித்த நித்ய முத்த மிழ்க்கு மருள்போதனே
அத்ர பத்ர சித்ர மிட்ட யிற்ப டைத்த யிற்கி ணைத்த
லர்க்க னுற்ற பொற்கு றத்தி மணவாளனே
அத்த னுக்கு மைக்கி தத்த புத்ர சித்தி முத்தி யைச்செ
யற்பு தச்சி வக்கி ரிக்குண் முருகேசனே.

திருச்செந்தில் வகுப்பு

சந்த பந்த முந்து விந்தை செஞ்சொ லின்ப்ர பந்த நந்து
சங்க மங்க லம்பொ ருந்து தமிழ்பாடியே
தஞ்ச மென்று சென்று சென்று நஞ்சு விஞ்சு நெஞ்ச வஞ்சர்
தங்கண் முன்பு நின்று நின்று மெலிவோதியே
சிந்தைநொந்து நொந்து நைந்து நைந்து வெம்பி வெம்பி யங்கி
சிந்தி யிந்த வெங்கு டம்பை யழிபோதுமா
சிங்க முன்பு குந்த தந்தி யின்கு லங்க லங்க பண்பெர்
சிந்த துன்ப மென்ரு ழிந்து கரையேறுவேன்
அந்த ரங்க ளண்ட ரண்ட மண்ட லங்கு லுங்க நின்ற
சைந்த சைந்து பந்தெ ழும்ப வசுராதியோர்
அங்க டங்க டுண்ட துண்ட கண்ட பந்தி சண்டை வந்த
லைந்து ருண்டு மண்டை சிந்த வடர்கோபனே
கந்த சந்த நுங்கு கும்ப கொங்கை யிந்தி ரன்மடந்தை
கங்க ணம்பு ரந்த வென்றி யணிநேயனே
கம்பு மஞ்ச முந்தி கழ்ந்தி ருந்தி டுந்தி றஞ்செ றிந்து
கஞ்ச நன்ற லர்ந்த செந்தின் முருகேசனே.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடிய ரெல்லாம்.

திருச்செந்திலாண்டவன் திருவடி வாழ்க.



அநபாயசோழ அரசர் கவரிவீச
சேக்கிழார் சுவாமிகள் சிதம்பரம் மாடவீதி வலம்வருதல்.

கிடைக்கும் இடம்

1. திருஞானசம்பந்தம் அண்டு கம்பெனி,
கவுணியன் அச்சகம், 41, பிராட்வே, சென்னை.

2. திருநாவுக்கரசு நாயனார் சைவ சித்தாந்த கழகம்,
திருத்துறையூர் வழி, கடலூர்.

3. அருள்நெறி கழகம், பண்ருட்டி.

4. கணபதியா பிள்ளை,
தில்லை திருமுறை கழகம், கீழவீதி, சிதம்பரம்.

5. பரமன் செட்டியார்,
பன்னிரு திருமுறை மன்றம்,
இந்தியன் பாங்க், திருச்சிறுப்பள்ளி.

6. தருமலிங்க முதலியார்,
பன்னிரு திருமுறை மன்றம்,
மீனாக்ஷி ஆலயம், மதுரை.

7. அருணாசலம் பிள்ளை, அப்பர் அருள்நெறி கழகம்,
கீழ ரதவீதி, திருநெல்வேலி.

8. விஸ்வநாதன் செட்டியார்,
திருநாவுக்கரசு கோயில்,
அழகன்குளம், இராமநாதபுரம்.

9. வைத்தியநாத சிவாச்சாரியார்,
அப்பூதியடிகள் ஆலய அர்ச்சகர்,
தென்குடித்திட்டை, தஞ்சை.

10. ந. பெ. கோவிந்தசாமி நாடார்,
66, ராமா நாய்க்கன் தெரு, ராயபுரம், சென்னை-13

கவுணியன் அச்சகம், சென்னை.